
ரூ. 8.00

திருவள்ளுவர் ஆண்டு 2046 தை
ஜனவரி 2015

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

இயற்கை வேளாண்மை பேணுவோம்!



சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி

மக்கள் சிந்தனை

குன்றக்குடி – 630 206

சிவகங்கை மாவட்டம்

தொலைபேசி எண் : 04577 - 264227

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : ஸ்ரீ சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

மக்கள் சிந்தனை

நிறுவனர் : தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2046 மாதம் : தை
மலர் : 30 இதழ் : 1

இயற்கை வேளாண்மை பேணுவோம்!

நாடாகொன்றோ; காடா கொன்றோ;
அவலா கொன்றோ; மிசையா கொன்றோ;
எவ்வழி நல்லவர் ஆடவர்,
அவ்வழி நல்லை; வாழிய நிலனே!

என்பது ஔவை மூதாட்டியின் பாடல் தருகின்ற செய்தி. ஒரு நிலப்பரப்பு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். காடாக இருக்கலாம்! மலையாக இருக்கலாம்! பள்ளமாக இருக்கலாம்! மேடாக இருக்கலாம். ஆனால் அந்த மண்ணில் செயலாற்றுகின்ற செயல்வீரர்கள் இருந்தால் நாடு வளமாகும்.

மண்ணை வளமாக்கி மனிதர்களை நலமாக்கச் செயலாற்றுகின்ற செயல்வீரர்கள்தான் உழவர் பெருமக்கள்!

"கைவருத்தி உழைப்பவர் தெய்வம்"

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்; வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்றார் பாரதி.

உழைப்போர் உண்டு களித்திருக்க முடியாத நிலை. வேளாண்மைப் பொருளாதாரம் எந்தத் திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறது?

வேளாண்மை இயற்கை சார்ந்ததாக அமைய வேண்டும். இரசாயன உரங்களையும், பூச்சிகொல்லி மருந்துகளையும்

பயன்படுத்துவதைத் தவிர்த்த இயற்கை உர விவசாயமே நல்வாழ்வுக்கு ஏற்றது.

இயற்கை சார்ந்த விவசாயத்தை நாம் பழந்தமிழகத்தின் விவசாய வாழ்வாகக் காணமுடிகின்றது. பாரி ஆண்ட பறம்புமலையில் உழவர் உழாதன நால்வகைச் செல்வம் உண்டு என்பர். மூங்கில் நெல், பலா, தேன், வள்ளிக்கிழங்கு ஆகியன மண்ணை உழாமல் கிடைத்த செல்வங்கள் ஆகும்.

அமெரிக்காவில் ரோடெல் நிறுவனம் வெளியிட்ட "நீயும் சாகுபடியும் தண்ணீரும்" என்ற புத்தகம் இயற்கை வேளாண்மை பற்றிய அற்புதச் செய்திகளைத் தருகின்றது.

* மனிதன் மற்ற உயிரினங்களில் இருந்து மேம்பட்டவன் அல்ல. அவன் இயற்கையின் ஓர் அங்கம். அவனால் இயற்கையைக் கட்டுப்படுத்தவோ மாற்றி அமைக்கவோ முடியாது. ஆனால் ஒத்திசைந்து வாழ முடியும்.

* செடி, கொடிகளும் விலங்குகளும் சமூகமாக வாழ்கின்றன. அவை காற்று, தண்ணீர், மண், வெளி, சூரிய ஒளி ஆகிய இயற்கை ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்கின்றன.

* மண்ணில் கழிவு என்று எதுவும் இல்லை. உணவுச் சங்கிலியில் பல கண்ணிகள் உள்ளன. மேல் மட்டத்தின் கழிவு, கீழ் மட்டத்தின் உணவு. மனிதன் கழித்ததை, கால்நடைகள் உண்ணுகின்றன. கால்நடைக் கழிவு, புழுக்களுக்கும், நுண்ணுயிர்களுக்கும் உணவாகிறது. நுண்ணுயிர் செயல்பாடு செடி வளர்ச்சிக்குத் தேவைப்படுகிறது. உணவுச் சங்கிலியைப் புரிந்து செயல்பட்டால், பண்ணைக்குத் தேவைப்படும் சக்தியின் அளவு குறையும்.

* உணவு உற்பத்தி, இயற்கை சுழற்சியைச் சார்ந்து உள்ளது. ஆரோக்கியமான மண் என்பது, உயிரற்ற திடப்பொருள் அல்ல. உயிரோட்டமுள்ள ஓர் அமைப்பு.

* விவசாயத்திற்குப் பூச்சிகள் எதிரிகள் அல்ல. மகரந்தச் சேர்க்கைக்கு அவை இன்றியமையாதவை. அவற்றில் ஒன்று மற்றொன்றுக்கு உணவாகின்றது.

இந்த இயற்கைச் சார்ந்த விவசாயத்தைச் செயல்படுத்தி வரும் ரோடெல் நிறுவனத்திடம் **"இதற்கு முன்னோடி யார்?"** என்று கேட்டபொழுது, **"இந்தியா தான் எங்கள் இயற்கை விவசாயத்தின் முன்னோடி!"** இயற்கை விவசாயத்தை எங்கள் மூதாதையர் ஆல்பர்ட் ஓவார்டு தான் இந்தியாவில் வெற்றிகரமாக செயல்படுத்தினார். **"உழவாண்மை ஆவணம்"** என்ற நூலைத் தந்தார்.

இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் இந்திய உழவாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவிய ஆல்பர்ட் ஓவார்டு **"இந்திய உழவர்களும், இந்தியாவில் வாழும் பூச்சிகளும்தான் எனக்குப் பேராசிரியர்களாக இருந்தார்கள்"** என்று கூறுகின்றார்.

இந்தியக் காடுகளைக் கூர்ந்து கவனித்த ஆல்பர்ட் ஓவார்டு, "காட்டில் யாரும் உர மூட்டைகளை எடுத்துச் செல்லவில்லை. யாரும் ஸ்ப்ரேயர்களை முதுகில் சுமந்து செல்லவில்லை. பூச்சிகள் பறக்கத்தான் செய்கின்றன. செடி, கொடி, மரங்களின் வளர்ச்சிக்கு எல்லையே இல்லை" எனத் தெரிவிக்கின்றார் என்று விடை கிடைத்தது.

நச்சுப்படாத விவசாயமும், நலிவு இல்லாத விவசாய வாழ்வும் இன்று தேவை.

இயற்கை வேளாண்மையில் நிலவளம் உயர்ந்து கொண்டே போகிறது. வேலையும், பணச்செலவும் குறைகின்றது. இது எப்படி சாத்தியம் எனக் கேள்வி எழலாம். இயற்கைக்கே திருப்பி அளிப்போம் என்பது தான் அந்த விதி!

இதை மசானோபு ஃபுகோக்கா என்ற ஜப்பான் தேச விவசாய ஆராய்ச்சியாளர் நிரூபித்திருக்கின்றார்.

காடுகளில் மரக்கூட்டங்களுக்கு யாரும் இரசாயன உரம் போடவில்லை! பூச்சிகொல்லி மருந்து தெளிக்கவில்லை! நிலத்தை உழாமல் முதல் முறையாக நெற்பயிர் அறுவடை செய்தபொழுது நாம் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை என்கின்றார்.

நிலத்தில் இரசாயன உரங்களும் பூச்சிகொல்லி நஞ்சுகளும் பயன்படுத்தாததால் இப்போது கிடைக்கும் விளைச்சலில் பத்தில் ஒரு பங்கு குறையலாம். ஆனால் இயற்கையின் சக்தி நமது சக்திக்கு அப்பாற்பட்டது. முதல்கட்ட இழப்புக்குப் பிறகு விளைச்சல் அதிகமாகத் துவங்கி விரைவில் முதலில் எடுத்த விளைச்சலை மிஞ்சி விடும்.

கால் ஏக்கர் நிலத்தில் பல லட்சம் சிலந்திகள் வாழ்கின்றன. அவை பல்லாயிரம் மீட்டர் நீளம் உள்ள வலைகளைப் பின்னுகின்றன. பயிரை அழிக்கும் தாய்ப்பூச்சிகள் சிலந்தி வலையில் சிக்குவதால் பயிர்கள் காப்பாற்றப்படுகின்றன என்பதை ஜப்பானிய இயற்கை வேளாண் ஆராய்ச்சி நிபுணர் மசானோபு ஃபுகோக்கா செயல்வடிவில் தம் நிலத்தில் நிரூபித்துக் காட்டியுள்ளார். பூச்சிக்கொல்லி மருந்து மண்ணுக்கும், மனிதனுக்கும் ஏற்படுத்துகின்ற பாதிப்பை அறியும்பொழுது அதிர்ச்சி ஏற்படுகிறது.

செயற்கை உரங்களும் பூச்சிகொல்லி மருந்துகளும் இயந்திரங்களும் பயன்படுத்தப்படுகின்ற விவசாயம் இயற்கைத் தாயின் மடியை சேதப்படுத்தக்கூடும் என்று ஆஸ்திரேலியப் பேராசிரியர் பில்மொர்ல்லிசன் குறிப்பிடுகின்றார். பில்மொல்லிசன் காட்டுக்குள் உழவு கூடச் செய்யாமல் விவசாயம் செய்யும் பழங்குடி மக்கள் தலைவரிடம் "நீங்கள் உழவுகூட செய்யாமல், செயற்கை உரங்கள் இடாமல், பூச்சிகொல்லி மருந்து தெளிக்காமல் பயிர் விளைவிக்கின்றீர்கள். சமவெளியில் டிராக்டர் கொண்டு நிலத்தை உழும் பண்ணையில் இரசாயன உரங்களைக் கொட்டி விவசாயம் செய்வதற்கும் என்ன வேறுபாடு?" என்று கேட்டார். பழங்குடி மக்களின் தலைவர் "நாங்கள் இயற்கைத் தாயின் மடியில் இருந்து கொண்டு தாயின் மார்பில் பால் குடிக்கின்றோம்! சமவெளியில் டிராக்டர் பயன்படுத்தும்

பண்ணையில் தாயின் மார்பகத்தை அறுத்து ரத்தத்தைக் குடிக்கிறார்கள்" என்று பழங்குடி மக்களின் தலைவர், தாங்கள் உழவு செய்யாமல், உரம் இடாமல் செய்யும் விவசாயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

நமது ஆதீனத்தின் மேற்பார்வையில் உள்ள சிங்கம்புணரிக்கு அருகில் உள்ள மேலப்பட்டி என்ற இடத்தில் அமைந்துள்ள தென்னந்தோப்பில் சுமார் 3 ஏக்கர் நிலத்தில் குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையமும், காசர்சோடு தென்னை ஆராய்ச்சி நிலையமும் இணைந்து 17 நாடுகளைச் சார்ந்த வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய சுமார் 250நெட்டை ரகக் கன்றுகளை நடவு செய்துள்ளார்கள். இதே மேலப்பட்டி தென்னந்தோப்பில் வறட்சியைத் தாங்கக்கூடிய 10 மரங்களை அடையாளம் கண்டு அவற்றின் கன்றுகளையும் நடவு செய்துள்ளனர்.

மேலப்பட்டி தென்னந்தோப்பில் 10 மரங்களின் கன்றுகளோடு பல்வேறு நாடுகளின் நெட்டை ரகக் கன்றுகள் மகரந்தச் சேர்க்கை செய்து வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய புதிய கலப்பு ரகங்களை உற்பத்தி செய்யும் செயல்திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளனர். திட்டத்தின் காலம் சுமார் 10 ஆண்டுகள் ஆகும். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நான்கு ஆண்டுகளைக் கடந்துள்ளது. இந்தத் தோப்பைப் பராமரித்து வந்த மோகன்லால் என்ற பணி ஓய்வு பெற்ற ஆசிரியர், வறட்சியால் பாதிக்கப்பட்ட இந்தத் தோப்பில் சுமார் 2000க்கும் மேற்பட்ட புதிய கன்றுகளை நடவு செய்தார். இந்தப் பகுதியில் அதிகம் அறிமுகப்படுத்தாத சொட்டு நீர்ப்பாசனத்தை நடைமுறைப்படுத்தினார். மரங்கள் அவரோடு பேசும். நலிவுற்ற வாட்டமுற்ற மரங்களிடம் நலம் விசாரிப்பார்...! மரங்களுக்கும் உயிர்ப்பு, உணர்வு, உறவு உண்டு என்பதற்கு அடையாளம் அவர் மரங்களோடு கொண்ட நட்பு. அவர் மறைந்து பல நாட்கள் ஆகிவிட்ட நிலையிலும் மரங்களிடம் காணப்பட்ட வாட்டத்தை, ஏக்கத்தை நாம் புரிந்துகொள்ள முடிந்தது.

அதைப் போலவே நமது குன்றக்குடித் திருமடத்தில் செயற்கை உரம் இடாமல் பூச்சி மருந்து தெளிக்காமல் இயற்கை உரம் மட்டும் பயன்படுத்தி ஒரு காய்கறிப் பண்ணை அமைய, குன்றக்குடி வேளாண்மை அறிவியல் நிலையம் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியது.

குறிப்பாக நம் திருமடத்தில் அமைந்த காய்கறிப் பண்ணையில் மலைச் சரிவுகளில் பயிரிடும் பீட்ரூட், நூல்கல் போன்றவற்றை வறண்ட தட்பவெப்ப நிலை உள்ள நமது பகுதிகளிலும் பயிர் செய்து அபார மகசூலைக் காட்டினார் பண்ணை விவசாயத் தொழிலாளி திரு. ராமசாமி. இந்த பீட்ரூட், நூல்கல் உற்பத்தி செய்வதில் அபார ஆர்வம் காட்டினார்.

குளிர்ந்த பனிப் பிரதேசத்தில் மலைச்சரிவில் உற்பத்தியாகும் பீட்ரூட், நூல்கல் போன்ற காய்கறிப் பயிர்கள் நீண்ட தட்பவெப்பம் உள்ள வளம் குறைந்த மண்ணில் இயற்கை உரங்களால் அபார மகசூலை எட்டியது.

இப்போது பருவநிலை மாற்றங்கள், தட்பவெப்ப மாற்றங்கள், பருவமழை பொய்ப்பு முதலிய காரணிகளால் விவசாய வாழ்வு ஏற்றத்தாழ்வுகளைச் சந்தித்து வருகின்றது.

கடந்த கோடைக்காலத்தின் வறட்சியால் மழைப்பொழிவு குறைந்து போனது. விவசாயப் பயிர்களை மட்டுமல்ல, கால்நடைகள் கூட குடிக்கத் தண்ணீர் இன்றி துன்பப்பட்டன. வறட்சியின் உச்சக்கட்டம் மாநிலம் முழுவதும்! பல்லாயிரக்கணக்கான தென்னை மரங்கள் மடிந்து போயின. நமது ஆதீனத் தோப்பில் சுமார் 1000 தென்னை மரங்கள் மடிந்துவிட்டன. நெல்பயிர் சாகுபடியும் வறட்சியைச் சந்தித்தது. மனிதர்கள் மரணம் அடைந்தால் துக்கம் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் மரங்கள் மடிந்தால்....?

அதைச் சடப்பொருளாகப் பார்க்கின்றோம். அதன் உயிர்ப்பை, உணர்வை, உறவை நாம் உணர்வதில்லை.

“புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவரச் சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்
எம்பெருமான்!”

என்று மணிவாசகப் பெருமான் பாடினார்.

ஆன்மீகத் தளம் விருட்சங்களைக் கடவுளாகப் போற்றியது.

மதுரை கடம்பவனக்காடு....!

இன்று கடம்பவன மரங்கள் அழிந்த நிலையில் மீனாட்சி அம்மன் கோயில் வளாகத்தில் தங்கப் பட்டையிட்டு பட்டுப்போன கடம்ப மரம் காட்சிப் பொருளாகக் காட்சித் தருகிறது.

பிள்ளையார்பட்டி மருதவனம்....

குன்றக்குடி அரசவனம்...

ஊர்தோறும் தலவிருட்சங்கள் இருந்தன. தல விருட்சங்கள் ஊர் முழுவதும் நிறைந்து வளமும், செழுமையும் இருந்தன. தம் ஆட்சிப்பரப்பில் செடி, கொடிகளுக்குக் கூட வாட்டம் நேர்ந்துவிடக்கூாது என்பதற்காக வாடிய முல்லைக் கொடிக்குத் தன் தேரைத் தந்தான் பறம்புமலை ஆண்ட பாரிவள்ளல்.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளல் பெருமான்.

நெல்லும் புல்லும் வாடிய போது வாடிய மனிதகுலத்தின் போக்கு இன்று திசைமாறிவிட்டது.

தைத்திங்கள் பொங்கல் திருநாளுக்கு முதல் நாள் “போகி”. போக் வேண்டியதைப் போக்க வேண்டும். இல்லத்தின் குப்பை கூளங்களை அகற்றுவதோடு இதயத்தின் குப்பை கூளங்களை அகற்ற வேண்டும். ஆசை, கோபம், பொறாமை முதலியவற்றை இதயத்தின் ஆழத்திலிருந்து அறவே விரட்டுவோம்.

பொங்கல் பொங்கட்டும்!

மகிழ்ச்சியால் பொங்கட்டும்!

இனிக்கும் வெல்லத்தில் சிறிது உவர்ப்பு. உழவனின் வியர்வைத் துளியும், கண்ணீர்த்துளியும் கலந்ததால் தானோ?!

தொழில் வணிகப் பொருளாதாரத்தில் உற்பத்தியாளர்களே தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற உரிமை உடையவராய் இருக்கின்றனரா? இரத்தத்தை வியர்வையாக்கி உழைத்த விவசாயிகள் தங்களின் உற்பத்திப் பொருள்களுக்குத் தாங்களே விலை நிர்ணயம் செய்கின்ற உரிமை அற்றவர்களாக உள்ளனர். தம் விவசாய உற்பத்திப் பொருள்களுக்குத் தாமே விலை நிர்ணயிக்கும் உரிமை பெறும் நாளே விவசாயிகள் வாழ்வின் பொங்கல் திருநாள்!

இயற்கையைச் சுரண்டி, இயற்கையைச் சேதப்படுத்தி நம்மை நாமே அழித்துக் கொள்கின்றோம்.


"இயற்கை அழகு! அதனை
ஆராதனை செய்வோம்!
இயற்கை அறிவு! அதனிடம்
கற்றுக் கொள்வோம்!
இயற்கை அன்பு! அதன்
உறவை உணர்வோம்!
இயற்கை தாய்மை! அதன்
சேய்கள் ஆவோம்!
இயற்கை இறைமை! அதனைப்
போற்றி வழிபடுவோம்!"

இயற்கையைப் பேணிப் பாதுகாத்து நல்வாழ்வு வாழ்வோம்.

வறுமை வாழ்வு மறைய
நல வாழ்வு செழிக்க
இயற்கை சார்ந்த வேளாண்மை
வாழ்வு செழிக்கட்டும்!
பொங்கல் பொங்கட்டும்!
மகிழ்ச்சியால் பொங்கட்டும்!

அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

என்றும் வேண்டும் இன்பம் அன்பு



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசகத் தேன்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

யார் சதுரர்?

வாழ்க்கையே ஒரு வாணிகம் தான்! வாணிகம் தவறல்ல. ஆனால், இலாபமே வேட்டையாக எண்ணி வாழ்தல் தீது. இருபாலும் பயனும் மகிழ்வும் உண்டாகும் வகையில் நடப்பதே நல்ல வாணிகம். ஆன்மிக வாழ்க்கையிலும் வாணிக நடைமுறை உண்டு.

"கொண்டும் கொடுத்தும் ஈசர்க்கு ஆட்செய்தல்", என்று இசைப்பா கூறும். "மாரிமாட்டு என்னாற்றும் கொல்லோ உலகு" என்பார் திருவள்ளுவர். இஃது ஓர் உயர்வு நவிற்சி! மாரி, உயிரினங்களுக்குச் செய்யும் அளவு நாம் அதற்குக் கைம்மாறு செய்ய இயலாது என்பது உண்மை. ஆயினும் மழைக்குரிய சாதனங்களாகிய ஏரி, குளங்களைப் பராமரிப்பதும், புயலை நீர்த் திவலைகளாக மாற்றும் குளிர்ச்சியைத் தரக்கூடிய மரங்களை வளர்ப்பதும் நாம் மழைக்குச் செய்யும் கைம்மாறு! ஆனாலும் மழையின் உதவி அளவிலும் பயனிலும் கூடுதலானது. பொதுவாகவே மானிடரைத் தவிர மற்ற உயிரினங்கள் எல்லாமே நிறையக் கொடுக்கும்; குறைவாகப் பெறும். மரங்கள் நம்மிடத்திலிருந்து பெறுவது குறைவு. ஆனால், நமக்குத் திருப்பித் தருவது அதிகம். பசுமாடுகள் நம்மிடம் பெறுவது குறைவு. ஆனால், நமக்குத் தருவது அதிகம். இதுதான் நாகரிக வாழ்க்கை; பண்பாட்டு வாழ்க்கை! மானிடரோ சமுதாயத்தினிடமிருந்தும் மற்ற உயிர்க் குலங்களிடமிருந்தும் நிறையப் பெறுகிறார்கள். ஆனால் மிகமிகக் குறைவாகவே திருப்பித் தருகிறார்கள். சிலர், திருப்பித் தருவதே இல்லை. அதனாலேயே மழை குறைகிறது; மண் வளம் கெடுகிறது; மாடுகள் இளைத்துச் சாகின்றன. இது இயற்கைக்குப் பொருந்தா வாழ்க்கை. நாம் எவ்வளவு பெறுகிறோமோ அவ்வளவு திருப்பித் தரவேண்டும். இதுவே மத அறநெறி; திருவாசக நெறி. "தந்தது உன்றன்னை" என்றதால் திருப்பெருந்துறையுறை சிவனின் எளிவந்த கருணையும் மாணிக்கவாசகர் ஆன்மாவின் வளர்ச்சியும் புலப்படுகிறது.

மாணிக்கவாசகர் அமைச்சுப் பணியில் ஈடுபட்டு இருந்தார். அவர்தம் சிந்தையில் திருப்பெருந்துறையுறை சிவன் குடிகொண்டான். அதுமட்டுமா? எத்தனை எத்தனையோ திருக்கோயில்கள் இருக்க, திருப்பெருந்துறையுறை சிவன் மாணிக்கவாசகரின் உடலையே இடமாக – திருக்கோயிலாகக் கொள்வானேன்?

இறைவனுக்கு உவப்பானவை கற்கோயில்கள் அல்ல; உடற்கோயிலே; மனக்கோயிலே; இறைவன் கற்கோயில்களில் எழுந்தருள்வது முதல்நிலை! அங்குவரும் மனிதர்களைச் சந்தித்து உறவாடிப் பக்குவப்படுத்தி அவர்தம் உடற்கோயிலில் புகுந்து தங்கி அருள்வான்! காஞ்சிபுரத்து பல்லவமன்னன் காடவர் கோமான் கட்டிய கற்றளியில் எழுந்தருள்வதைவிட, பூசலார் நாயனார் பொன்னுடலில் கட்டிய மனக்கோயிலில் எழுந்தருள்வதை முன்னுரிமையாகக் கொண்டனன் என்ற வரலாறு உணர்த்தும் உண்மை என்ன? இறைவனுக்கு மனக்கோயிலே உவப்பானது என்பதுதானே.

திருப்பெருந்துறை இறைவன், மாணிக்கவாசகரின் உடலை இடமாகக் கொண்டு எழுந்தருளினன். இதனால் மாணிக்கவாசகர் புறம்போகாமல் பாதுகாப்புக் கிடைக்கிறது. இறைவனால் மாணிக்கவாசகரின் அன்பைத் தூண்டி அனுபவிக்க முடிகிறது. திருவாசக அமுதம் பருகக் கிடைக்கிறது. இருபாலும் நலஞ்சார்ந்த பண்டமாற்று! விண்ணவர்கள் தேடரிய, பழமறைகள் தேடரிய, முனிவர்கள் தேடரிய திருப்பெருந்துறையுறை சிவன், மாணிக்கவாசகரின் உடலையே திருக்கோயிலாகக் கொண்டனன்! இந்த அரிய அருட்செயலுக்குக் கைம்மாறு செய்ய இயலுமா? பொருள் பற்றிச் செய்யும் பூசனைகள் கைம்மாறு ஆகுமா? ஆகாது! ஆகாது! புன்புலால் யாக்கை! இதில் புண்ணியத்தின் புண்ணியம் சிவம் புகுந்து குடியமர்ந்தருள் செய்தலுக்கு ஏது கைம்மாறு? இந்த உலகியலில் சாதாரணமான செயல்களுக்கே கைம்மாறு செய்ய இயல்வதில்லையே! முடியவில்லையே! நமது நாட்டு விஞ்ஞானிகள் – குறிப்பாகக் காரைக்குடி மத்திய மின் வேதியியல் விஞ்ஞானிகள் வழங்கும் அறிவியல் கொடைக்கு எப்படிக் கைம்மாறு செய்ய இயலும்! "நன்றி" என்ற சொற்களால் கூறலாம்! அது எங்ஙனம் கைம்மாறு ஆகும்! பெற்றதற்கு ஏற்பக் கைம்மாறு கொடுத்தல் வேண்டும்! அதுதான் உண்மையில் கைம்மாறு! இன்று, நன்றி கூறுதல் ஒரு சடங்கு! இங்ஙனம் இருக்க இறைவனுக்கு என்ன கைம்மாறு செய்ய இயலும்?

அப்பரடிகள் கூறியதைப் போல "உன்னை நினைந்தே என் ஆவி கழியும்" என்பதே கைம்மாறு. மாணிக்கவாசகரும் "நின்று ஆடிப்பாடி அலறவேண்டும்" என்கிறார். உடல் எல்லாம் நெஞ்சமாக, கண்ணாக அலறி அழவேண்டும் என்கிறார்.

திருப்பெருந்துறை சிவன் மாணிக்கவாசகரை ஏற்றுக் கொண்டான்! மாணிக்கவாசகரும் விருப்புடன் ஆட்பட்டார். இறைவன் - திருப்பெருந்துறையுறை சிவன் தன்னை மாணிக்கவாசகருக்குத் தந்தனன். இங்கு எடுத்தது - தந்தது இரண்டும் இறைவன் செயலேயாம். மாணிக்கவாசகரின் விருப்பம் ஏதும் இல்லை! அதனாலேயே தனது விருப்பம் எல்லாம் இறைவன் தன் விருப்பமே என்று பாடுகின்றார். "வேண்டுவது உன்றன் விருப்பன்றே" என்பது திருவாசகம்.

இறைவன் - திருப்பெருந்துறையுறை சிவன், தன்னை மாணிக்கவாசகருக்குத் தந்ததால் மாணிக்கவாசகரின் உடலை இடமாகக் கொண்டதால் முடிவே இல்லாத இன்பத்தை மாணிக்கவாசகர் பெற்றார்; அனுபவித்தார். திருப்பெருந்துறையுறை சிவனின் அருளாரமுதத்தை அண்ணித்தும் தேனித்தும் துய்த்தும் இன்புறுகின்றார். ஆனால், திருப்பெருந்துறையுறை சிவன், மாணிக்கவாசகரை ஏற்றுக் கொண்டதால் என்ன பெற்றார்? ஆன்மாவிடமிருந்து ஆண்டவன் எதைப்பெறமுடியும்? ஒன்றுமில்லை என்றுதான் கூறுவர்.

கொள்வது - கொடுப்பதில் அல்லது எடுப்பது - தருவதில் இருபாலும் பயனில்லையானால் வாழத்தெரியாதவர், சாமர்த்தியமில்லாதவர் என்று பொருள்படும். இறைவன் சதுரப்பாடில்லாதவனா? இறைவனைவிட மாணிக்கவாசகர் சதுரப்பாடுடையவரா? இல்லை! இல்லை! திருப்பெருந்துறை இறைவனே சதுரப்பாடுடையவன்! எப்படி? மாணிக்கவாசகர் என்ற ஓர் அன்பரை ஆட்கொள்ள இறைவன் எடுத்த முயற்சியின் அளவு என்ன? குதிரைச் சேவகனானான்! உதிர்ந்த பிட்டைத் தின்றான்! கொற்றாளாகி மண் சுமந்தான்! பிரம்படிபட்டான்! அம்மம்ம! எவ்வளவு இடர்ப்பாடுகள்! இத்தனை இடர்ப்பாடுகளையும் கடந்து மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையுறை சிவனிடம் பெற்ற அர்த்தமில்லா இன்ப அனுபவத்தை, திருவாசகப் பாடல்களாகத் தந்தார். திருவாசகம் பாடல்கள் மட்டும் அல்ல ; திருவருளனுபவம்! இறைவனின் திருவருளுக்கு மொழியால் வடிவம் தந்தவர் மாணிக்கவாசகர். இந்தப் பண்சுமந்த

பாடல்களைப் பரிசாகப் பெற்றான் இறைவன். திருவாசகப் பாடல்களை அனுபவிக்கும் ஆரா வேட்கையில் தாமே அதனை எழுதிப் படியும் எடுத்து வைத்துக்கொண்டனன். இதனைச் சிவப்பிரகாசர் "கைகளோ முறிபடும் கைகள்" ஆயினும் திருவாசகத்தைப் படியெடுத்தான் என்பதனை

கைகளோ முறிபடுங் கைகள் காணின்
கண்களோ ஒன்று காலையில் காணும்
மாலையில் ஒன்று வயங்கித் தோன்றும்
பழிப்பின் ஒன்று விழிப்பின் எரியும்
ஆயினும் தன்னை நீ புகழ்ந் துரைத்த
பழுதில் செய்யுள் எழுதினன்

என்று கூறி விளக்குகின்றார். மாணிக்கவாசகர் காலத்துக்குப் பிறகு, இறைவன் தம்மை வழிபடுதலினும் திருவாசகத்தினைப் பூசை செய்தல். ஓதுதல் முதலிய செயற்பாடுகளாலேயே தம்மை அடையமுடியும் என்ற நியதியை வகுத்தருளினன். ஒவ்வொரு ஆன்மாவையும் ஆட்கொள்ள எத்தனை தடவை மண் சுமப்பது? பிரம்படி படுவது? இந்தத் துன்பத்திலிருந்து திருப்பெருந்துறையுறை சிவன் தப்பித்துக் கொண்டனன். திருவாசகம் ஓதினாலேயே திருப்பெருந்துறையுறை சிவன் அருள் கிடைக்கும். ஆட்கொள்ளப்பெறுவர்; இது நியதியாகவேயாயிற்று. இது திருப்பெருந்துறையுறை சிவனுக்கு மாணிக்கவாசகரிடமிருந்து கிடைத்த பாதுகாப்பு. மக்களுக்கும் எளிய வழியில் இறைவனை அடைய முடிந்தது. அதுமட்டுமா? கடையூழிக் காலத்தில் இறைவனின் தனிமைத் துன்பத்தை மாற்றிக் கொள்வதற்காக - படிக்க மாணிக்கவாசகர் திருவாசகத்தைத் தந்தார். "கடையூழி வருந்தனிமை கழிக்கவன்றோ அம்பலத்துள் உடையாருன் வாசகத்தில் ஒரு பிரதி கருதினதே" என்று இதனை மனோன்மணீயம் கூறி விளக்கும். இப்போது யார் சதுரர்? மாணிக்கவாசகர் பெற்றது அந்தமொன்றில்லா இன்பம்! ஆனால், திருப்பெருந்துறையுறை சிவன், தேனமுதத் தமிழில் திருவருள் நலங்கொழிக்கும் திருவாசகப் பாடல்களை, பண் சுமந்த பாடல்களைப் பரிசாகப் பெற்றனன்! கடையூழிக் காலத்தில் இறைவன் தன் தனிமைத் துன்பத்தை நீக்கிக் கொள்ளத் திருவாசகத்தைப் பெற்றுக் கொண்டனன்! மேலும் வழிவழி வரும் தலைமுறைகளை ஆண்டு கொண்டருளக் கருவியாக விளங்கும் திருவாசகத்தைப் பெற்றனன்! மீண்டும் மீண்டும் மண் சுமத்தல், பிரம்படி படுதல் முதலிய துன்பங்களிலிருந்து திருப்பெருந்துறையுறை சிவன் விடுதலை பெற்றனன். திருவாசகம்

பெற்றதால் திருப்பெருந்துறையுறை சிவன் அடைந்தவை பலப்பல. அவையும் நிலையானவை! ஆதலால், சதுரர் திருப்பெருந்துறையுறை சிவனே!

ஆயினும் பலர் மாணிக்கவாசகரே சதுரர் என்பர். மாணிக்கவாசகர் ஆன்மா; அறியாமை உடைய ஆன்மா! இத்தகைய மாணிக்கவாசகர் பாசம் நீங்கப் பெற்று அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றதே பேறு. ஆதலால், மாணிக்கவாசகர் சதுரர் என்பர். ஆயினும் ஆன்மாக்களை ஆட்கொண்டருளுதல் இறைவனின் கடமை. இப்பிறப்பில் இல்லையாயினும் எப்பிறப்பிலாவது ஆட்கொண்டருளப் பெறுதல் வேண்டும். திருவருள் நலம் பெற்றவர்கள் எல்லாரும் மாணிக்கவாசகரைப் போலத் திருவாசகம் தந்தனரா? இறைவனையே எழுத வைத்தார்களா? இல்லை! இல்லை! ஆதலால் திருப்பெருந்துறையுறை சிவனே சதுரர்!

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்.
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யானிதற் கிலன் ஓர் கைம் மாறே!"

(கோயில் திருப்பதிகம் – 10)

(தொடரும்)



"மக்கள் சிந்தனை"
சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும்
அன்பர்களுக்கும்
இனிய புத்தாண்டு / பொங்கல்
வாழ்த்துக்களை
அன்புடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.

– ஆசிரியர்

சிலம்பில் தண்டனையும் மேல் முறையீடும்

(தமிழாகரர். தெ. முருகசாமி)

கோப்பெருந்தேவியின் சிலம்பைத் திருடிய கள்வன் எனத் தவறாகக் கருதப்பட்டதால் கோவலன் கொலை தண்டனை பெற்றான். பாண்டிய மன்னன்,

ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்றச் சிலம்பு கொணர்க ஈங்கு

எனத் தெளிவாகவே கூறியிருந்தாலும் "கொன்றச் சிலம்பு" என்றதுதான் பாண்டியன் வேகமாக எடுத்த முடிவாக அமைந்துவிட்டது. அதன் காரணமாகவே கோவலனது கொலை நடந்துவிட்ட நிலையில் பாண்டியன் முறை பிறழ்ந்த குற்றத்திற்காளானதோடு அவனால் முறைபிறழ்ந்த குற்றம் உறுதிப்படும் வகையில் "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" என்ற நீதி, இலக்கியக் கொழிப்பாகச் சமூகத்திற்கு வழங்கப்பட்டது.

பாண்டிய மன்னன் முறை பிறழ்தற்கு ஊழ்வினையே காரணமாகிவிட்டதால் அவன் எதையும் கருதாதவனாய்க் கொன்றச் சிலம்பு கொணர்க எனக்கூறினான். இருப்பினும் ஈண்டு "யாவதும் தேரானாகி" என்ற சொற்கள் திருட்டுப் பற்றி ஆராயப்படவேண்டிய தொனியைக் குறிப்பதால் விரைவாக வேகப்பட்டுக் கொன்றச் சிலம்பு கொணர்க எனக் கூறிவிட்டானோ என எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் கட்டுக்காவலையுடைய அரண்மனையிலிருந்து திருடப்பட்டதென்பது எளிதாகக் கருதமுடியாதென்பதால் அதுபற்றி ஆராயப்படவேண்டும் என்ற குறிப்பு - யாவதும் தேரானாகி என்ற சொற்களுக்குள் புதைபொருளாக உள்ளதால் கொண்டச் சிலம்பு கொணர்க எனக் கூறிக் கோவலனை விசாரணைக் கைதியாகச் சிறைப்பிடிக்க உத்தரவிடாமல் கொன்றச் சிலம்பு கொணர்க என வேகப்பட்டுவிட்டான்.

இங்ஙனம் கூறற்கு ஊழ்வினைதான் காரணமாயினும் அதனை முழுமையும் ஏற்கமுடியாததாயுள்ளது. ஏனெனில் "வினை விளை காலம் ஆதலின் யாவதும், சினையலர் வேம்பன் தேரா னாகி" என்றதும் இளங்கோவடிகள் கொன்றச் சிலம்பு கொணர்க என்பதாகக் கூறியிருக்க வேண்டும்; அங்ஙனமின்றி,

"ஊர்காப் பாளரைக் கூவி ஈங்கென்
தாழ்பூங் கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையது ஆகின்"

எனத் தெளிவாகக் கூறிய பின் கொன்றச் சிலம்பு கொணர்க என்றதால் இடையில் கூறிய தெளிவான கூற்றுக்கும் ஊழ்வினைக்கும் தொடர்புள்ளதாக உறுதிப்படுத்தமுடியவில்லை, இக்கருத்தைக் குறிப்பாக உணரச் செய்யுமாறாகவே இளங்கோவடிகள் பயன்படுத்தியுள்ள "சினையலர் வேம்பன் தேரானாகி" என்ற சொற்கள் உள்ளன. பொதுவாகப் பாண்டியர்க்கு வேப்பம்பூ மாலை உரித்தாயினும் ஈண்டு இளங்கோவடிகள் பாண்டியனை இந்த ஓரிடத்தில் மட்டுமே சினையலர் வேம்பன் என்றது சிந்தனைக்குரியதாகிறது. அதாவது பாண்டியன் கூறப் போகும் தீர்ப்பு, கசப்பானதாகவே இருக்கப் போகிறது என்ற உண்மையின் பிரகடன வாசகமாகவே "வேம்பன்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டது எனலாம். இதனால் பாண்டியன் தெளிந்த உணர்வோடு இயல்பான கசப்பின்வழி உணர்த்தும் குறிப்பிற்கும் வினை விளை காலத்திற்கும் தொடர்பில்லை எனத் தெரிகிறது.

மேலும் சிந்திக்கும் ஓர் உண்மையாலும் ஊழ்வினைதான் எல்லாவற்றிற்கும் காரணம் என முழுமைப்படுத்த முடியாததாக உள்ளது. பாண்டியனது அவையில் ஆடல்பாடல் நடக்கும்போது அவற்றை ஈடுபாடாகக் கண்டு களித்த மன்னன்மீது மனைவி கோப்பெருந்தேவி திரிபுணர்வாகக் குறைகண்டு அவையினின்றும் கோபமாக ஏகிவிட்டாள். இதனை இளங்கோவடிகள் கூறுகையில்,

ஊடல் உள்ளம் உள்கரந்து ஒளித்து
தலைநோய் வருத்தம் தன்மே லிட்டு,

சென்றாள் என்றார்.

உடனே மன்னன், மந்திரச் சுற்றம் நீங்கிச் சில்தியர் தம்மொடு மனைவியின் அந்தப்புரம் போனபோதுதான் பொற்கொல்லன் மன்னனிடம் சிலம்பு திருடிய கள்வனை அகப்படுத்தி வைத்துள்ளதாகக்

கூறினாள்: மனைவியின் ஊடல் தீர்க்கச் செல்லும் வேகமான நிலையில் நிலைகலங்கிய மன்னன் யாவதும் தேரானாகி கொன்றச் சிலம்பு கொணர்க என்றதால் வினை விளை காலம்மட்டுமே எல்லாவற்றிற்கும் காரணம் எனக் கூறமுடியாததாயுள்ளது. இதனால் சுற்றுப்புறச் சூழலும் ஒரு காரணமாகிறது எனலாம்.

ஆக ஊழ்வினையாலும் சுற்றுப்புறச் சூழலாலும் ஆராயாமல் வழங்கப்பட்ட கொலை தண்டனை தீர்ப்பானது யாவதும் தேரானாகி என்ற சொற்பொருள் பொருத்தத்தில் மேல்முறையீடு செய்வதற்கு உரியதாகிவிட்டது எனலாம். அதனால்தான் கண்ணகியும் சிலம்பு பற்றிய ஆராய்ச்சி சரிவர நடந்திருக்காது என்ற நம்பிக்கையில் எஞ்சிய ஒற்றைச் சிலம்புடன் வாதிடுகையில் "என் காற் பொற்சிலம்பு மணியுடை அரியே" என மேல் முறையீட்டைத் தொடங்கினாள். அதைப் பதிந்து கொள்ளும் விதமாக மன்னனும் "யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே" என்றான்.

ஊர்காப்பாளரிடம் என் மனைவியின் காற்சிலம்பு இருக்குமாயின் என்ற மன்னன், கண்ணகியிடம் யாமுடைச் சிலம்பு எனத் தன் மனைவியை இணைத்த உளப்பாட்டுத் தன்மைச் சொல்லாகக் கூறியதால் மேல் முறையீட்டுத் தீர்ப்பு, கோவலனைக் குற்றவாளியினின்றும் விடுவிக்கவும் உண்மையாகத் திருடிய கள்வன் யார் என அறிவிக்கவும் போவதன் உண்மையாகவுமுள்ளது எனலாம்.

மேலும் யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே என்ற மன்னன் கூற்றில் இருமுறை உடை என்ற சொல் கையாளப்பட்டுள்ளது சிந்தனைக்குரியதாகும். உடை சிலம்பு எனக் கூறாமல் உடைச்சிலம்பு என ஒற்று மிகுத்துக் கூறியதால் தம்மால் கோவலனுக்கு வழங்கிய கொலை தண்டனை தீர்ப்பு ஆராயாமல் கூறப்பட்டதான பாவத்தால் தாமே தீர்ப்பை உடைத்து மாற்றி எழுதப் போவதன் குறிப்பை உணர்த்தும் விதமாக "யாமுடைச் சிலம்பு" என்றானோ என எண்ணத் தோன்றுகிறது.

மன்னன் தன் மனைவியின் சிலம்பை உடைத்துக் காட்டுவதன் மூலம் தீர்ப்புப் புதுப்பிக்கப்படப் போவதில்லையானாலும் வழக்கைத் தீர விசாரிக்காதது மட்டுமின்றி வழக்கிற்கான சிலம்பைக் கண்ணாற்கண்டு ஆராயததன் மனைவி கோப்பெருந்தேவியுமே குற்றம் செய்த குறிப்பு அடங்கியுள்ளதால் அவன் தன்னையறியாமையாலேயே யாமுடைச் சிலம்பு என உண்மையைத் தன் வாயாலேயே உடைத்துவிட்டதாகத் தெரிகிறது.

கிடைத்த சிலம்பு எங்ஙனம் களவாடப்பட்டது என்ற விசாரிப்பு ஒருபுறமிருக்க, சிலம்பு கிடைத்த மகிழ்ச்சியில் மாதேவி அதைக் கண்ணுற்றிருந்தால் முன்பு அதனைப் போட்டுப் பழகிய காரணத்தால் இது தன்னுடையதன்று எனக் கூறியிருப்பாள். இதனால் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டிருந்தால் கோவலன் கொலையை அனுபவித்திருக்கமாட்டான். பாண்டியனும் நீதி தவறியவனாகச் சொல்லப்பட்டிருக்கமாட்டான். உலகியலில் தாயறியாத சூலா என்பார்கள். அதுபோலப் போட்டுப்பழகிய சிலம்பைக் கண்டுரைக்கும் வாய்ப்பு மாதேவிக்கு இருந்தும் அவள் அதை ஏதோ ஒரு மயக்கத்தின்பொருட்டுக் கண்டும் காணாமலிருந்த குற்றத்திற்காகவே "தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள் போல்" கணவனது இறப்போடு தன் இறப்பையும் தனக்கான தண்டனையாக ஆக்கிக் கொண்டாள் என்கிறார் இளங்கோவடிகள்.

ஈண்டு சிலம்பை ஆராயாத மன்னனை விட மாதேவியே பெருங் குற்றத்திற்கு ஆளாகிறாள், அரண்மனைக்குக் கொண்டு செல்லப்படாத நிலையில், சிலம்பு சேரவேண்டிய இடத்திற்கே அதாவது பாண்டிமாதேவியின் இருப்பிடத்திற்கே வந்துவிட்டதால் அதை அவள் பார்த்திருக்க வேண்டும். மேலும் ஊடல் தீர்க்கும் கருவியாகவும் அது இருந்ததால் அதைப் பார்த்திருக்க வேண்டும். இவையெல்லாம் அவை மாட்டு நடந்ததா? இல்லையா? எனத் தெளிவாகக் காப்பியப் போக்கில் அறிவில்லையாயினும் கிடைத்த சிலம்பு பற்றிய அக்கறை அவளிடம் இல்லாதது, மன்னனின் ஆராய்ச்சியின்மை போன்றதாகிவிட்டது.

பொதுவாகச் சிலம்புக்குள் இருக்கும் மணி, முத்து போன்றவை வெளிப்படையாக அறிய வாய்ப்பில்லையாயினும் சோழநாட்டுக் கைவினைக்கும் பாண்டிய நாட்டுக் கைவினைக்குமான வேறுபாடுகள் சிலம்பின் புறத் தோற்றத்தாலும் உணர்ந்திருக்க வாய்ப்புண்டு. இந்த வாய்ப்பெல்லாம் தவிரப் பெற்ற நிலையில்தான் மாதேவியின் மௌனம், அவளைக் குற்றவாளியாக்கிற்று - யாமுடைச் சிலம்பு என்ற மன்னனின் வாக்குமூலம் எனலாம்.

அவையில் உடைக்கப்பட உள்ள ஏதோ ஒரு சிலம்பின் உடைப்பால் முன்னர் நடந்துவிட்ட கொலைத் தண்டனைத் தீர்ப்பு உடைபடப் போவதன் உண்மையை உறுதிப்படுத்த - யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே - என்ற படிப் பாண்டியன் யாமுடைச் சிலம்பு எனத்தானும் தன்

மனைவியுமாகச் சேர்ந்தே சிலம்புடைப் பாம் சொல்லோசையால் தீர்ப்பை மாற்றிச் சொல்லும் ஓசையாக யாமுடை என்றும் முத்துடை என்றும் இருமுறை உடை என்ற சொல்லைச் சொல்லவைத்தது இளங்கோவடிகளின் சொற்சிலம்பான ஒய்யாரமாகும்.

இந்நிலையில் கண்ணகி சிலம்பை உடைத்துக் காட்டிய அளவில் கண்ணகி தொடுத்த மேல் முறையீட்டு வழக்கில் சில உண்மைகள் கிடைத்தாலும் வழக்கு முடிந்ததாகாமல் கிளை வழக்கொன்று முளைப்பதற்குரிய சில சூழல்கள் அமைந்துவிட்டன. "பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட" எனக் கூறியவாறே மன்னன் இறந்துவிட்டதால் வழக்கில் விசாரிக்கப்படவேண்டியவன் பொற்கொல்லன் என்ற பதிலை வழக்கின் மற்றொரு மேல் முறையீட்டிற்கு வழிவகுக்குமாறு கூறி இறந்தான் பாண்டியன்.

பொன்செய்கொல்லன் தன்சொல் கேட்ட என்றதில் பொற்கொல்லன்தான் சிலம்பைத்திருடிய கள்வன் என மறைமுகமாகக் கூறப்பட்டதால் அவன்மீது வழக்குத் தொடர வாய்ப்புண்டு எனலாம். ஏனெனில் கோவலன் கொணர்ந்த சிலம்பைப் பார்த்ததும் "கரந்து யான் கொண்ட காலணி ஈண்டுப் பரந்து வெளிப்பாடா முன்னம்" என நினைந்த அளவிலேயே கோவலனின் சிலம்பை அந்தப்புரத்தில் சேர்த்தானேயன்றித் தான் களவாடிய அரண்மனைச் சிலம்பைத் தனக்குத்தானே வைத்துக் கொண்டதுதான் அவனைக் கள்வன் எனக் காட்டிக் கொடுத்ததென்க!

திருடிய சிலம்பை அந்தப்புரத்தில் சேர்த்திருந்தால் கோவலனே குற்றவாளி என மேல் முறையீட்டாலும் உறுதிப்பட்டிருக்கும். மன்னன், மாதேவி இறப்புகள் நிகழ்ந்திருக்காது. இந்த இருவரின் தற்கொலை இறப்பிற்குக் கண்ணகியே காரணமாயினும் அவ்விருவர் செய்த ஆராயாத குற்றத்தை உணர்ந்த அளவில் தேடிக்கொண்ட தண்டனை என்பதால் கண்ணகி மீது வழக்குத் தொடர வாய்ப்பில்லாமல் போனது, ஆனால் பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட எனக் கூறி மன்னன் இறந்ததால் சிலம்பு பற்றிய விசாரணைக்கான புது வழக்கு பொற்கொல்லன் மீது தொடர வாய்ப்பிருந்தது. ஆனாலும் அப்படித் தொடரமுடியாதபடி போனதற்கு விசாரணை செய்வதற்குரிய மன்னனே இறந்துவிட்ட பிறகு யாரால் விசாரிக்க இயலும்?

விசாரிக்கப்படவேண்டிய பொற்கொல்லன் விசாரிக்கப்படாத நிலையில் அவனை உயிருடன் உலவவிட்டதால் அவனுக்கான தண்டனை பற்றிய குறிப்பே சிலப்பதிகாரத்தில் அமையாமல் போனது. ஆக தன் கணவன் கள்வனல்லன் என்பதாகக் கண்ணகி தொடுத்த மேல் முறையீட்டால் இறந்துபோன கணவனை அவள் பெறாவிட்டாலும் கள்வனல்லன் என்றது உறுதிப்பட்டதோடு உண்மையான கள்வன் பொற்கொல்லனே என்பது, பொன்செய்கொல்லன் தன்சொல் கேட்ட என்ற மன்னது கூற்றால் ஓரளவு தெரியநேர்ந்தாலும் தன் ஆட்சியாளர் செய்த தீமையைத் தன்மீது ஏற்றிக் கொண்டு தானே குற்றவாளி என ஒப்புக்கொள்ளும்படி வாக்குமூலமாக "யானோ அரசன்? யானே கள்வன்!" எனக் கூறிக்கொண்டு இறப்பாகிய தண்டனையைத் தானே தேடிக்கொண்டான் பாண்டியன். இதனால் எந்த ஒரு வழக்கும் கண்ணகி மீதோ பொற்கொல்லன்மீதோ தொடரும் சூழல் இல்லாமல் போனது.

ஆனாலும் தனக்குத் தானே கள்வன் எனக் கூறிக்கொண்டதால் பாண்டியனது மனச்சாட்சியான நீதிமன்றத்தில் தானே வழக்குத் தொடர்ந்து, இறந்துவிட்ட நிலையில் வழக்கு எஞ்சியதாக நின்றுவிடாமல் அந்த வழக்கைப் பாம்பறியும் பாம்பின்கால் என்பதற்கேற்பச் சேரன் செங்குட்டுவனைக் கொண்டு தீர்த்து வைக்கும் விதமாக,

எம்மோ ரன்ன வேந்தற் குற்ற
செம்மையின் இகந்தசொல் செவிப்புலம் படாமுன்
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது

எனக் கூறச் செய்ததன் வாயிலாய், பாண்டியனது மனச்சாட்சிக்கான வழக்கில் அவன் கள்வனல்லன் என்ற தீர்ப்பு இளங்கோவடிகளின் நாடகத்திறன் உத்தியால் பெறப்பட்டது எனலாம்.

இவ்வாறாகச் சிலப்பதிகாரத்தைப் பொறுத்தமட்டில் பொற்கொல்லன் பொய்வழக்கொன்றைத் தொடர, அதனால் பாண்டியன் கோவலனுக்குக் கொலை தண்டனையைத் தர, அதன்பொருட்டுக் கண்ணகி மேல் முறையீடு செய்ய, அதனால் பாண்டியன் பொற்கொல்லன் சொல்கேட்டு நீதிதவறிய நிலையில் தானே கள்வன் என்று கூறி இறந்தான். இந்நிலையில் கண்ணகியின் சிலம்புடைப்பான மேல்முறையீட்டால் கோவலன் கள்வனல்லன் என்பதும் உணர்த்தப்பட்ட நிலையில் பாண்டியன் தெளிந்து பொன்செய்கொல்லன் தன்சொல்கேட்ட யானே

கள்வன் எனக் கூறி இறந்தாலும் அவனது வளைந்த செங்கோல் உயிர்விட்டதால் நிமிர்ந்ததாகச் சேரன் செங்குட்டுவன் கூறிய கூற்றால் பாண்டியன் கள்வனல்லன் என்பது முற்றிலுமாகப் பெறப்பட்டது: ஆனாலும் "பொன்செய் கொல்லன் தன்சொல்ல கேட்ட" என்று பாண்டியன் கூறி இறந்ததுமட்டும் விசாரிக்கப்பட முடியாததாக எஞ்சியதால் அவன்தான் கள்வன் என்று பறைசாற்றப்படும் சூழலில் தண்டனையடையாமல் தப்பித்தான்.

வழக்குகளால் கோவலன் கொலை தண்டனையடைந்தான். பாண்டியன் தனக்குத்தானே சிறப்பாகிய தண்டனையை யடைந்தான். கணவனுக்குத் துணைநின்ற பாண்டிமாதேவியும் இறப்பாகிய தண்டனையைத் தேடிக்கொண்டாள். இவற்றால் பொற்கொல்லனை விசாரிக்கப்படவேண்டிய மேல்முறையீட்டு வழக்கு, நீத்துப் போனதால் காப்பியம் படிப்போர் அனைவரும் பொற்கொல்லனின் வஞ்சனையையறிந்துத் தூற்றுதலே காலமெல்லாம் தண்டனையாக அமைந்தது எனலாம். கண்ணகியால் மதுரை எரிந்தபோது அவன் எரிந்தான் என்பதினும் வாசகர் வட்டத்தின் வசவே பெருந்தண்டனையாம் என்க. மேலும் பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட என்றதால் மேல்முறையீட்டுக் கிளைவழக்கொன்று பதிவு செய்து விசாரிக்கப்படவேண்டிய சூழலிருந்தும் மன்னனும் மாதேவியும் இறந்துவிட்டதால் அதற்கு வாய்ப்பில்லாமல் போனாலும் பொற்கொல்லனின் செயலே காட்டிக் கொடுத்தது என்பதால் அதுவே அவனைக் கள்வனாகக் கருதச் செய்தது. எவ்வாறெனில் விலைபேச கோவலன் கொண்டுவந்த கண்ணகியின் சிலம்பைத் தான் எடுத்துவைத்துக் கொண்டு, முன்புதான் திருடிய அரண்மனைச் சிலம்பை அந்தப்புரத்திற்குள் அனுப்பியிருந்தால் கண்ணகியின் சிலம்புடைப்பாலும் கோவலன் கள்வன் என்பது உறுதிப்பட்டிருக்கும். ஆனால் அங்ஙனம் சிலம்பை மாற்றிவைத்துத் தப்பிக்கத் தெரியாததால் பலஉயிர்கள் இறந்த நிலையில் பொற்கொல்லன் கள்வன் என அறிதற்குரிய வாய்ப்பில்லாமல் போனாலும் அவனின் செயலை நன்கறியும் வாசகர்கள் சிலம்பைக் கற்குந்தோறும் பொற்கொல்லன் பழிக்கப்படுவதையே தீராத தண்டனையாகக் கருதலாம் என்க!

இங்ஙனமாகச் சிலப்பதிகாரத்தில் வழக்குக்கு மேல் வழக்காக, தண்டனைக்குமேல் தண்டனைகளாக அமைந்த சூழலை அமைத்துக்காட்டிய இளங்கோவடிகளின் பாத்திரப்படைப்பான பாத்திறனை என்னென்பது! வாழ்க நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்!

காரோணம் - ஓர் ஆய்வு

(திருமையாதீனப் புலவர்.வித்துவான். தா. குருசாமி தேசிகர்)

நாகபட்டினம் – நாகைக் காரோணம்; என்றும், குடமூக்கில், குடந்தைக் காரோணம் என்றும் தேவாரத் தலங்களில் காணப்படுகின்றன. இவற்றுள் "காரோணம்" என்பது யாது? என்று ஆய்வோம்.

சிவக்கவிமணி ஆய்வு :

காரோணம் – காயாரோகணம் என்பதன் திரிபு என்றும், காயம் உடம்பு : ஆரோகணம் – ஏற்றுக்கொள்ளுதல் என்றும்; புண்டரிக மகாமுனிவரை, இறைவன் தந்திருமேனியில் ஏற்றுக்கொண்டு அருளினான் என்றும், நாகம் (ஆதிசேடன்) பூசித்ததால் பெற்ற பெயர் "நாகை" என்றும், பெரியபுராண உரையில், சிவக்கவிமணி உரைப்பார்.

ம.பா. ஆய்வு :

ஒரு ரிஷியைக் காயத்தோடு வானுலகுக்கு "ஆரோகணம்" செய்யும்படி இறைவன் அருளியதால் காரோகணம் என்ப. அது மருவிக் "காரோணம்" எனத் தலப்பெயருட்சேர்ந்தது என்று சைவசித்தாந்த சமாஜப் பேரறிஞர் ம. பாலசுப்பிரமணிய முதலியார் உரைப்பார்.

முத்து.சு.மா. ஆய்வு :

"கார் ஓணத்தான்" என்னுந் தமிழ்ச்சொல் இரண்டன் புணர்ச்சியாகத் தோன்றுகிறது. "ஓணத்தான்" என்றதை எதுகையில் வைத்து,

"பாணத்தான் மதில் மூன்றும் எரித்தவன்
பூணத்தான் அரவாமை பொறுத்தவன்
காணத்தான் இனியான் கடல்நாகைக்கா
ரோணத்தான் எனநம்வினை ஓயுமே"

என்று பாடியதால், அது தமிழாதல் புலப்படும். காஞ்சிப் புராணம் காயாரோகணப்படலம் 6 பார்க்க. காரோணத்தான் என்பதன் முதல் எழுத்தை ஈற்றில் நிறுத்தி "ரோணத்தான்" என்று அடி முதலில் அமைப்பது, "கெடிலவீ" – ரட்டனாரடி சேருமவர்க்கே என்பது போலும் "திருவோணம்" "ஓலமார் கங்கையாதி ஓணநீராடல் எல்லாம்" (சேதுபுராணம் தோத்திர48)

என்பவற்றால் "ஓணம்" என்னும் தமிழ் சொல்லாட்சியை உணர்க - என்பது தருமையாதீனத்துப் பெரியார் முத்து.சு. மாணிக்கவாசக முதலியார் ஆய்வுரையாகும்.

திருமங்கை :

"கடல் நாகைக் காரோணம்" என்றும் - "சிந்தை செய்வாரைப் பிரியாது இருக்கும் திருமங்கையே" என்ற அப்பரின் திருவிருத்தப் பாடலில் "திருமங்கை"யார் என்பதைப் பார்த்தால் காரோணத்து ஆய்வு தெரியவரும்.

"திருமங்கை" என்றது இலக்குமியை அன்று, பரமானந்தாவேசமாகிய மகா மோட்ச லட்சுமியை, (சிவாத்வித சைவபாடியம் பக்கம் 555) சிவாலயங்களிலும், சிவபூசையிலும் மகாலட்சுமியென வழிபடப் பெறுவதும், இச்சிவமே பெறும் திருவேயாகும். இருவரும் ஒருங்கே இறவருங்காலை, எந்தையே ஒடுக்கி, ஆங்கவர்தம், உருவம் மீதேற்றிக் கோடலாற் காயாரோகணம்; மாலும் மலரவனும், "எம்மை நினது காயத்துறுத்துக" என்று இறைஞ்சி நோற்றார். அதனால் காயாரோகணம் நோற்போர் கயிலாய மெய்யோடெய்திக் குடிகொளும் ஆற்றினாலும் அப்பெயர் கொண்டது! என்பதனையும் தருமையாதீன உரைக்குறிப்பு வழங்கும்.

அபிதான சிந்தாமணி ஆசிரியர் குறிப்பு :

காயாரோகணம் - இது சிவமூர்த்தி சர்வசங்கார காலத்தின் பிரமவிஷ்ணுருத்ராதி சமஸ்த தேவ மனுஷாதி சரா சரங்களைத் தம்மில் ஒடுக்கின் தானங்களாம். (காஞ்சிபு) என்று கூறுவார். இச்செய்திகளை முறைப்படி ஆய்வு செய்தால் "காரோணம்" என்பது, சிவபெருமானே அயன் அரியாக "ஆரோகணம்" செய்து (அதிட்டித்து) நின்று வழங்கும் அருளிப்பாட்டின் தன்மையைப் புலப்படுத்துவது காஞ்சிப்புராணத்தால் விளக்கமுறும்.

முதல் திருமுறை கூறுவது :

சிவனே ஐந்தொழிலை ஆற்றும் முதல்வன். பதவிகளில் இருப்பார் அனைவரும் சிவன் அருளைத் தாங்கி நின்றே ஆற்றுகின்றனர். திருச்சிவபுரம் பதிகத்தில், திருமாலை அதிட்டித்து நின்று காத்தல்

தொழிலைச் செய்தருளும் சிவபிரான் என்று சம்பந்தர் அடையாளம் அருளுவார்.

"அலைகடனடுவறிதுயிலமர் அரியுரு
இயல்பரனுறைபதி
சிலைமலிமதிள் சிவபுரம் நினைபவர்
திருமகளொடு திகழ்வரே"

என்ற தேவாரத்தில் "எல்லா உலகங்களும் தத்தம் கால எல்லையில் நிலைபெறுக" என்ற எண்ணத்துடன் பாற்கடல்மேல், பள்ளி கொள்ளும் திருமால் உருவின் இயல்போடு, அரன் உறையும் பதி சிவபுரம் என்றும் சிவபுரத்தை நினைபவர் "திருமகளொடு திகழ்வர்" என்றும் சிவத்தின் திருவருட்பெருக்கை விளக்கம் செய்வார் வேணுபுரச் செல்வர்.

திருமால் அறிதுயில் கொள்ளுவதை "யோகநித்திரை" என்று தருமையாதீன உரை வெளிப்படுத்தும்.

குருவருள் உணர்த்துக :

அயன், அரி, அரன் மூவரும் இறைவனுடைய சக்தியாவர். இது சம்பு பட்சம். சம்பு - இறைவன்: இறைவனே அயன், அரி, அரன் ஆன நிலை. ஆணவமலமறைப்பால் "வியாபகம்" இன்றி அணுத்தன்மை எய்திய, அயன், அரி இருவரும் அடிமுடி தேடி இளைத்த வரலாறு பிரசித்தம். இவர்கள் அனுபட்சமாகிய உயிர்வர்க்கத்தினர். அதிலும் அரனாகிய உருத்திரன், அன்று முதல் இன்றுவரை, "தானே பிரமம்" என்று தருக்கியவர் அல்லர். அதனாலேயே அரனே சிவம் எனப் போற்றப்படுகிறார். அவ்விருவருங்கூட ஒருகற்பத்திலேதான் இவ்வாறு தருக்குற்றனர். இறைவனே மூவரும் ஆயினமையைத் திருநாவுக்கரசர் "ஒருருவே மூவுருவம் ஆனநாளோ" என்ற வினாவில் விடையை வைப்பார் என்பது குருவருள் ஆய்வு. ஆதலின் நாகைக் காரோணம் - குடந்தைக் காரோணம் என்ற தலங்களில் திருமால் கோயில்களும் உள்ளன. எனினும் சிவன் உறையும் பெருங்கோயிலுள் அக்கோயில்களும், ஆங்குறையும், அரியும் அடங்கியுள்ளனர் என்ற குறிப்பையே "காரோணம்" என்பது குறிப்பிடும் என்பது அனைத்துக் கருத்தின் முடிபாகும். காரோணம் சிவபரத்துவத்தைக் காட்டும்.

வஞ்சியே! எங்கிருக்கின்றாய்!

(புலவர். ஆ. பழநி, காரைக்குடி)

தலைப்பைக் கண்டவுடன் பெண்ணொருத்தியைக் காணவில்லை போலும். அவளுக்கு வேண்டியவர்கள் வஞ்சியே எங்கிருக்கின்றாய்? என்று கூவி அலைகின்றார்கள் என்று எண்ணிவிட வேண்டா. நான் தேடிக்கொண்டிருப்பது பூவாவஞ்சியை; பூக்கும் வஞ்சிகளை இல்லை. கல்வெட்டு ஆய்வாளர்கள் சிலர், (எல்லாரும் இல்லை) சேரர்களின் தலைநகராகிய வஞ்சியை அமராவதி நதிக்கரையில் அமைந்துள்ள கருவூருக்குள் (கரூர்) தேடிக்கொண்டிருக்கின்றார்கள். தேடிக்கொண்டிருப்பதோடு நிறுத்திக் கொண்டிருந்தாலாவது பரவாயில்லை. இதுதான் (கரூர்) சேரர்களின் உண்மையான தலைநகர் வஞ்சி. இதற்கான ஆதாரங்கள் நீர்மேல் எழுத்தாக இல்லை; கல்மேல் எழுத்தாக உள்ளன என்று வாதிடத் தொடங்கி உள்ளனர்.

கொங்கு நாட்டுக் கருவூருக்கு வஞ்சி என்றொரு பெயர் உண்டுதான்; அது கல்வெட்டுக்களில் குறிக்கப்படுவதும் உண்டுதான். ஆனால் இதுதான் சேரர்களின் பாரம்பரியமான தலைநகராக விளங்கிய வஞ்சியா என்பதுதான் கேள்வி.

நமக்கு உண்மை தெரியவேண்டும். காலங்காலமாக சேரர்களின் தலைநகரம் மேற்குக் கடற்கரையை ஒட்டிய பகுதியில் அமைந்திருந்ததாகத்தான் படித்திருக்கிறோம். இன்று அதனைச் சோழநாட்டை ஒட்டிக் கொண்டுவருவதுதான் வியப்பாக உள்ளது.

சேரர்களின் தலைநகராக விளங்கிய வஞ்சியின் அமைவிடம் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்திலும், பெரியபுராணத்திலும் பின்னர்த் தோன்றியவேறு சில நூல்களிலும் விளக்கப்பட்டுள்ளன. அவற்றை நாம் தேடிக்கண்டு கொண்டால் உண்மை ஒருவாறு விளங்கக்கூடும்.

ஊர்களின், மலைகளின் அமைவிடங்கள், நாடுகளுக்கிடையே செல்லும் நெடுஞ்சாலைகள் இவற்றை எல்லாம் கற்பனையாக வெளிப்படுத்தாமல் உள்ளது உள்ளபடியே கூறுவதுதான் இளங்கோவடிகளின் இயல்பு என்பதை நாம் சிலம்பில் காண்கிறோம். பூம்புகாரில் இருந்து காவிரியின் வடகரை வழியே வந்தால் திருவரங்கத்தை அடையலாம் என்றும் அங்கிருந்து உறையூர் வந்து

தெற்கு நோக்கித் திரும்பினால் மதுரைப் பெருவழி என்றும்; வழியில் கொடும்பாளூர் உள்ளது என்றும், இங்கே மதுரை செல்ல மூன்று வழிகள் பிரிகின்றன என்றும், ஒன்று சிறுமலை வழியாகச் செல்வது மற்றொன்று அழகர்கோயில் வழியாகச் செல்வது என்றும், அங்கே சிலம்பாறு பாய்கிறது என்றும் கூறும் செய்திகள் நாம் இன்றும் காணக்கூடியவையாக உள்ளன. ஆகவே சிலம்பில் இளங்கோவடிகள் கூறும் செய்திகள் நம்பகமானவைதாம் என்பதை அறிய வேண்டுகிறேன்.

சிலம்பில் வஞ்சியின் அமைவிடம் பற்றிய செய்தி இரண்டிடங்களில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இவற்றை நாம் காய்தல் உவத்தில் இன்றி அறிந்துகொள்வோமானால் வஞ்சி இருந்த இடத்தை ஐயமின்றி அறிந்துகொள்ளலாம்.

பராசரன் என்றொரு பார்ப்பனர். வடமொழியில் பெரும்புலமை வாய்ந்தவர். பல்யானைச் செல்கெழு குட்டுவன் என்ற சேரமன்னனைக் கண்டு தன்வடமொழிப் புலமையை வெளிப்படுத்திப் பரிசில் பெற வேண்டும் என்று விரும்பி வருகின்றார். அவர் எங்கிருந்து வருகின்றார் என்றால் சோழநாட்டிலிருந்து வருகின்றார்.

"பூம்புனல் பழனப் புகார்நகர் வேந்தன்
தாங்கா விளையுள் நன்னாடு அதனுள்
வலவைப் பார்ப்பான் பராசரன் என்போன்
குலவுவேல் சேரன் கொடைத்திறம் கேட்டு", (சிலம்பு 23:59-62)

வருகின்றான். காடுகளைக் கடந்து செல்கின்றான்; நாடுகளைக் கடந்து செல்கின்றான்; ஊர்களைக் கடந்து செல்கின்றான். இறுதியாக அவன் பொதிய மலையையும் கடந்து சென்றான் என்கின்றார் இளங்கோவடிகள்.

"நீடுநிலை மலயம் பிற்படச் சென்று" -(சிலம்பு : 23;66)

பொதியிலின் அமைவிடம் எது? இது நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரம் பகுதியில் அமைந்திருப்பது. இதைத் தாண்டினால் அது எங்கே போய்ச்சேரும். மேலைக்கடற்கரையைத் தான் சென்றடையும். கரூர்தான் வஞ்சி என்றால் சோழநாட்டில் இருந்து மிக எளிதாக அடைந்துவிடமுடியும். காடுகளையும், ஊர்களையும் வேண்டுமானால் தாண்டிச்செல்லவேண்டியிருக்கலாம். ஆனால் நாடுகளைத் தாண்டிச்செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அது மேலைக் கடற்கரைப் பகுதியில் இருந்தால்தான் முதலில் சோழநாட்டைத் தாண்டிப் பின்னர் பாண்டிய நாட்டைத் தாண்டிச்செல்லவேண்டிவரும்.

கரூர்தான் சேரர் தலைநகரம் வஞ்சி என்றால் பராசரன் இவ்வளவு தூரம் அலைந்திருக்கவேண்டிய தேவை இல்லை. சோழ நாட்டின் எல்லையை ஒட்டிச்சில பத்துக்கல்களுக்குள்தான் அமைந்துள்ளது கரூர். கரூருக்கும் பொதியிலுக்கும் உள்ள தொலைவு ஏறத்தாழ 150 கல். இந்த நூற்றைம்பது கல் தொலைப் பராசரன் தாண்டிச் சென்றது ஏன்? என்ற வினாவுக்கு என்ன பதில் சொல்வது. ப்ராசரனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று சொல்வதா?

பராசரன் பரிசிலைப் பெற்றுக்கொண்டு வஞ்சியிலிருந்து சோழ நாட்டை நோக்கி வருகின்றான். வரும் வழியில் தங்கால் என்ற ஊரின் அரசமரத்தடியில் தங்குகின்றான். இத்தங்கால் என்ற ஊர் இன்று திருத்தங்கால் என்று வழங்கப்படுகின்றது. தங்கால் பொற்கொல்லனார் என்ற சங்ககாலப் புலவரை ஈண்டு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இங்கே சில நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவை நமக்குத் தேவையில்லை. ஆனால் திருத்தங்காலின் அமைவிடம் நமக்குத் தேவையான ஒன்று. திருத்தங்கால் என்ற இந்த ஊர் அருப்புக்கோட்டைக்கும் எட்டயபுரத்திற்கும் இடையில் அமைந்துள்ளது. கரூரில் இருந்து தென்திசையில் ஏறத்தாழ நூறுகல் தொலைவில் இருப்பது.

கரூர்தான் வஞ்சி என்றால், பரிசு பெற்றபின் பராசரன் தன்னாட்டுக்குத் திரும்பவேண்டும் என்றால் கிழக்கு நோக்கித்தான் நடந்திருக்க வேண்டும்அவன் ஏன் தெற்கு நோக்கி நடந்து தாங்காலுக்கு வருகின்றான்? நடந்து நடந்து தன் காலை ஒடித்துக்கொள்ள வேண்டும் என்று விரும்பி இருப்பானோ? பராசரன் பொதியிலைக் கடந்து சென்றதும், தங்காலை வந்து அடைந்ததும் இன்றைய கரூர்தான் சேரர்தலைநகரம் வஞ்சி என்பதை நிராகரித்துவிடுகின்றன. மற்றுமோர் ஆதாரம். இளங்கோவடிகள் தருவதுதான். அதையும் பார்த்துவிடுவோம்.

கண்ணகி சிலைக்குக் கல்கொணர வடநாடு செல்வது உறுதியானவுடன் வஞ்சி நகர அரண்மனையில் இருந்து செங்குட்டுவன் ஓர் ஆணை இடுகின்றான். "வாளையும் குடையையும் வடதிசை நோக்கிப் புறவீடு விடுக" என்கின்றான். புறவீடு விடுதல் என்பது திக்குவிசய நிகழ்ச்சியில் அமைந்துள்ள ஓர் நடைமுறை. வாளையும் குடையையும் தேரிலே ஏற்றி, அத்தேர் முன்னே செல்ல வீரர்கள் பின்னே செல்வர். தேர்

செல்லும் வழியில் உள்ள நாட்டின் அரசர்கள் பணிந்து திறை கொடுத்து நட்பாடலாம். இன்றேல் போரிட வேண்டி நேரிடும். இதுதான் புறவீடு விடுதல் என்பது. இங்கே செங்குட்டுவன்

"வாளும் குடையும் வடதிசைப் பெயர்க்க" (26:33)

என்று ஆணையிட்டான். ஆணையை ஏற்ற படையினர் வடதிசை நோக்கிச் சென்றனர். அவர்கள் சென்ற வழிபற்றிச் சில குறிப்புகளைத் தருகின்றார் இளங்கோவடிகள். அதனையும் காண்போம்.

வஞ்சியை விட்டு நீங்கிப் படைத்தலைவர்களும், தூசிப்படையும், வெள்ளிய நீரலைகள் மோதும் கடற்கரை ஓரமாக நடந்து மலையின் முதுகு நெளியுமாறு ஏறிச்சென்று, பல ஊர்கள் இடையிலே தோன்ற இறுதியில் நால்வகைப் படையொடும் நீலகிரியிலே பாடி வீடமைத்துத் தங்கினார்கள் என்கின்றார்.

"தானவர் தம்மேல் தம்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சி நீங்கித்
தண்டத் தலைவரும் தலைத்தார்ச் சேனையும்
மலைமுதுகு நெளிய நிலைநாடு அதர்பட
ஆளும்புரவி அணித்தேர்த் தானையொடு
நீல கிரியின் நெடும்புறத்து இறுத்து" (26 : 78 -85)

படையினர் சென்ற வழியில் ஒரு கடற்கரை வருகின்றது. மலைவருகின்றது. இறுதியில் நீலகிரி வருகின்றது. இப்பொழுது நாம் கல்வெட்டாய்வாளர்கள் சொல்லியபடி கரூரை வஞ்சி என்று வாதத்திற்காக ஏற்றுக்கொள்வோம். இந்தக் கரூரிலிருந்து வடக்கு நோக்கிச் சென்றால் கடற்கரை வருமா? நீலகிரி வருமா? ஒரு நாளும் வரமாட்டா. கரூரிலிருந்து மேற்கு நோக்கிச் சென்றால்தான் நீலகிரிவரும். ஆனால் இடையில் கடற்கரை வரமாட்டாது. ஆக இந்தக் கரூர்தான் சேரர்களின் தலைநகரம் வஞ்சி என்று கூறுவது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்பதை அறிய வேண்டுகின்றேன்.

நீலகிரி வந்தடைந்த படையினர் தாம் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தால் அவர்கள் கண்ணில் தெரிவது என்னவாக இருக்கும்? மேற்குக் கடற்கரையாகத்தான் இருக்கும். அப்படி என்றால் வஞ்சிமாநகர் மேற்குக் கடற்கரையை ஒட்டித்தானே இருக்க வேண்டும்?

வஞ்சி மாநகரம் பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்த போர்களால் அலைக்கழிக்கப்பட்டு தன் உருவம் சிதைந்து பல பெயர்களையும் தாங்கி வாழவேண்டிய நிலை ஏற்பட்டதை வரலாறு சுட்டிக்காட்டுகின்றது. முனைவர் வி.ஆர். சந்திரன் என்பவரால், "கொடுங்கல்லூரம்ம சரித்திரமும் ஆச்சார அனுட்டானங்களும்", என்ற பெயரால் எழுதப்பட்ட நூலை எழுத்தாளர் திரு. ஜெயமோகன் அவர்கள், "கொடுங்கோளூர் கண்ணகி" என்று மொழி மாற்றம் செய்திருக்கின்றார். அதில் வஞ்சி நகரம் எத்தனை பெயர்களால் அறியப்பட்டுள்ளது என்பதைத் தருகின்றார்.

(கேரளத்தில்) "கொடுங்கல்லூர்தான்" மிகப்புராதனமான நகரம். கி.மு. 200-ல் அல்லது அதற்கு முன்பு உருவானதாகக் கருதப்படும் வால்மீகி இராமாயணத்தில் "முசிரி பத்தனம் சைவ" என்ற குறிப்பு உள்ளது. காளிதாசனின் ரகுவம்சத்தில் "முரசீமாரு தோத்ததம்" என்ற குறிப்பு காணப்படுகிறது. அசோகர் கல்வெட்டுகளில் கேரளத்தின் தலைநகர் "முசரஸ்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. ஒன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரெனக் கருதப்படும் பயணியான பிளினி "முஸிரஸ்" என்றும், கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவரான டாலமி எழுதிய நூலில் "முஸிரஸ்" என்றும் இந்நகரம் குறிப்பிடப்படுகின்றது. தமிழ்ச்சங்கப் பாடல்களில் முசிறி எனப்படுகின்றது. யூதர்களின் செப்பேடுகளில் "மாக்கோட்டை" என்றும், சிரியன் கிறித்தவர்களின் செப்பேடுகளில் மாக்கோட்டா என்றும் குறிப்பிடப்படுகின்றது. சிலப்பதிகாரம் இதை "வஞ்சி" என்கின்றது. சமஸ்கிருத இலக்கியங்கள் இதை "மகோதயபுரம்" என்கின்றன.

கொடுங்கோளூர் கண்ணகி - பக் -7

சேரனின் தலைநகரமாகக் கூறப்படும் வஞ்சிதான் கொடுங்கல்லூர் என்பதுதான் பொதுவான கருத்து. தமிழில் கொடுங்கோளூர், மாக்கோதைபுரம், முசிறி என்று மூன்று பெயர் இதற்கு. எண்ணிப்பார்க்கலாம் போல் தோன்றுகின்றது.

மேலது - பக் -9

"மேலே காட்டிய எடுத்துக்காட்டினுள் சிலப்பதிகாரம் இதனை வஞ்சி என்கின்றது" என்று சொல்லப்பட்டிருந்தாலும் சிலப்பதிகாரம் மட்டுமில்லை, சங்க இலக்கியத்திலும் வஞ்சி சேரர் தலைநகராகவே குறிப்பிடப்பட்டுள்ளதனை அறிய வேண்டுகின்றேன்.

"ஒன்றுவேற் கோதை ஓம்பிக் காக்கும்
வஞ்சியன்ன என்வளநகர்" அகம் - 263

"தொன்றிமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்ன" அகம் - 396

"கடும்பின் அடுகலம் நிறையாக நெடுங்கொடிப்
பூவா வஞ்சியும் தருவேன்" புறம் 32

"மாண்வினை நெடுந்தேர் வானவன் தொலைய
வாடா வஞ்சி வாட்டும் நின்" - புறம் 39

இமயத்தில் விற்பொறித்த செய்தியும், வேந்தரைப் பிணித்து வந்த (கனகவிசயரை) செய்தியும் கூறப்படுவதைப் பார்த்தால் இது செங்குட்டுவனைக் குறிப்பது போலவே உள்ளது. கோதை (சேரன்) ஓம்பிக் காக்கும் வஞ்சி என்பதனால் சேரர் தலைநகரம் என்பது தெரிகிறது. ஆகச் சிலப்பதிகாரம் மட்டும்தான் வஞ்சி என்று கூறுவதாக நினைக்க வேண்டா. சங்க இலக்கியத்திலும் இது வஞ்சி என்றே அழைக்கப்பட்டுள்ளது.

யூதர்களின் செப்பேடுகளில் வருகின்ற மாக்கோட்டை, மகோதை என்னும் பழைய பெயர் மாக்கோதையாகிப் பின்னர் மாக்கோட்டை என மருவியிருக்கும்போலும்.

"கொடுங்கல்லூர் முன்பு ஒரு நகரமாகக் கருதப்பட்ட போது இதற்குள் "காக்களும் குன்று" என்ற குன்று இருந்திருக்கின்றது. ஊரைச் சுற்றி சாலைக்குடி வரை ஐம்பத்தைந்து (55) கிலோமீட்டர் சுற்றளவுள்ள ஒரு கோட்டை இருந்ததாகவும் கூறப்படுகின்றது. இதன் இடிபாடுகள் சில ஆங்காங்கே கிடைக்கின்றன".

எஸ்.எஸ். நந்தகுமார்
"திருவஞ்சிக்குளம் கோயில் வரலாறு"

"இந்தக் கோட்டையில் இருந்த அகஸ்தேஸ்வரர் கோயில் இப்போது இடம்தெரியாது போய்விட்டது. இன்று இப்பகுதியில் கொடுங்கல்லூர் தேவி கோயிலுடன், திருவஞ்சிக்குளம் கோயில், திருக்குலசேகரபுரம் கோயில், திருவள்ளூர்க்கோயில், ரவீஸ்வரபுரம் கோயில், பால்கிரீடேஸ்வரர் ஆலயம் ஆகிய கோயில்கள் உள்ளன"

மேலது

"இந்த ஊர்தான் (திருவஞ்சிக்குளம்) தொல்புகழ் பெற்ற வஞ்சிமா நகர் என்பது ஆய்வாளர்களின் பொதுவான கூற்றாகும். பிற்கால நூல்களில் திருஅஞ்சைக்குளம் என்ற பெயரும் உள்ளது. வஞ்சி நகரின் இதயம் என்று கூறப்படுவது இன்று கொன்றைவன நாதர் அமர்ந்திருக்கும் திருவஞ்சிக்குளம் ஆலயமேயாகும்"

மேலது

மேலே காட்டியவற்றிலிருந்து வஞ்சி என்ற நகரம் பல்வேறு காலங்களில் வேறு வேறு பெயரால் வழங்கப்பட்டிருந்ததை அறிந்தோம். போர்களால் ஏற்படும் அழிவு இடமாற்றத்தையும், பெயர் மாற்றத்தையும் கொண்டு வருவது இயல்பானதுதான். திருவஞ்சிக்குளம் என்பதில் உள்ள வஞ்சி திருஎன்ற முன்னொட்டையும் குளம் என்ற பின்னொட்டையும் சேர்த்துக் கொண்டிருக்குமோ என்றுகூட எண்ணிப் பார்க்கலாம்போல் தோன்றுகிறது.

பெயர்கள் மாறியிருக்கலாம் என்றாலும் அவற்றின் அமைவிடம் 55 கிலோமீட்டர் சுற்றளவுக்குள் தான் அமைந்துள்ளது என்கின்றனர் ஆய்வாளர்கள். அதுசரி இந்த 55 கிலோமீட்டர் சுற்றளவுள்ள இடம் எங்கே உள்ளது என்று கேட்டால் அது மேலைக்கடற்கரையில் பேரியாறு கடலில் கலக்கும் கழிமுகப்பகுதியில் அமைந்துள்ளதாகவே வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். இது உண்மை என்றால் கருந்தான்வஞ்சி என்பதை அப்பெயரால் அழைப்பது?

கொடுங்கோளூர் தான் பழைய வஞ்சிநகரம் என்று ஒரு சாராரும், இல்லை திருவஞ்சிக்குளந்தான் என்று மற்றொரு சாராரும் கருதுகின்றனர். இதில் இரண்டு பட்ட கருத்துகள் இருந்தாலும், இவை எல்லாம் 55 கிலோமீட்டர் சுற்றுவட்டத்திற்குள் அமைந்த பகுதிதான் என்பதை அறியவேண்டுகிறேன்.

இறுதியாகப் பெரியபுராணம் என்ன சொல்கிறது என்பதையும் நாம் பார்க்கவேண்டும். ஏனென்றால் சேரமான் பெருமாள் நாயனார் வஞ்சியிலிருந்து இரண்டு முறை சோழநாடு வருகின்றார். சுந்தரரும் சோழநாட்டிலிருந்து வஞ்சிக்குச் செல்கிறார். பாணபத்திரன் மதுரையில் இருந்து வஞ்சிக்குச் செல்கின்றான். இவர்கள் சென்ற பாதைகள் ஓரளவு விவரித்துக் கூறப்படுகின்றன. காண்போம்.

சோமசுந்தரக்கடவுள் பாணபத்திரருக்குச் சீட்டுக் கவிகொடுத்து சேரமான் பெருமாளைக் கண்டுவருமாறு கூறுகின்றார். பாணபத்திரர் சென்றவழி பற்றிச் சேக்கிழார் ஏதும் சொல்லவில்லை. ஆனால் அவர் சேரமானைக் கண்ட ஊர் எது என்று கூறுகின்றார்.

சங்கப் புலவர் திருமுகத்தைத்
தலைமேற் கொண்டு பத்திரனார்
அங்கப் பொழுதே புறப்பட்டு
மலைநா டணைய வந்தெய்தி
துங்கப் புரிசைக் கொடுங்கோளூர்
தன்னிற் புகுந்து.

கழறிற்றறிவார் புராணம் – 29

மலை நாட்டில் உள்ள கொடுங்கோளூரை அடைந்தார் என்பதனால் அவர் அடைந்தது சேரர்களின் தலைநகரம் என்று சொல்லப்படும் கரூர் இல்லை என்பது தெரிகின்றது. ஏனெனில் கரூர் மலைநாட்டில் இல்லை; கொங்கு நாட்டில் அல்லவா உள்ளது.

சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரர் சிறப்பை இறைவன் திருவாயால் அறிந்தவுடன் அவரை உடனே காணவிரும்புகின்றார். அவரை வழியனுப்புவதற்காக அமைச்சர்களும் அதிகாரிகளும் பொதுமக்களும் வஞ்சி நகரிலே கூடினார்களாம். "அந்நாட்டுள்ளார் அடையநிரந்தாணந்தார் வஞ்சி அகல் நகர்வாய்" என்பார் சேக்கிழார். மலைநாட்டின் எல்லையை அடைந்த பின்னர் –

அந்நாட் டெல்லை கடந்தணைய
அமைச்சர்க் கெல்லாம் விடையருளி
மின்னார் மணிப்பூண் மன்னவனார்
வேண்டு வாரை உடன்கொண்டு
கொன்னார் அயில்வேல் மறவர்பயில்
கொங்கு நாடு கடந்தருளிப்
பொன்னாட் டவரும் அணைந்தாடும்
பொன்னி நீர்நாட் டிடைப்போவார்.

கழறிற்றறிவார் – 50

இங்கே வஞ்சியிலிருந்து புறப்பட்ட சேரமான் அந்நாட்டின் (சேரநாட்டின்) எல்லைக்கு வந்தபின், உடன் வரவேண்டியவர்களை மட்டும்

வைத்துக்கொண்டு மற்றவர்களை எல்லாம் திரும்பிச் செல்லப் பணித்தார். பின்னர் மறவர்கள் நிரம்பிய கொங்கு நாட்டைக் கடந்து பொன்னி நாட்டைச் (சோழநாட்டை) அடைந்தார் என்று சொல்லப்படுகின்றது.

சேரமான் பெருமாள் புறப்பட்டது மலை நாட்டின் வஞ்சியிலிருந்து, இன்றைய ஆய்வாளர்கள் கூறும் கரூர் இருப்பது கொங்குநாட்டில் என்றால் இரண்டும் ஒன்றாவது எப்படி?

சோழ நாடு வந்த சேரமான் சுந்தரரை அழைத்துக்கொண்டு சோழ நாட்டுத் தலங்களை எல்லாம் வணங்கிய பின்னர், "சேய கொங்க" நாடணைந்தார் திருவாரூரர் சேரருடன், என்பார். பின்னர் இருவரும் கொடுங்கோளூரை அடைந்தனர். இதனைக்

'கொங்கு நாடு கடந்து போய்க்

குலவு மலை நாட்டெல்லையுற' என்று பாடுவார். அங்குச் சென்றவர் நேரே அரண்மனைக்குச் செல்லாமல் மக்களெல்லாம் எதிர்கொள்ள திருவஞ்சைக்களத்து இறைவனைக் காண அழைத்துப் போகின்றாராம். சுந்தரரை அழைத்துக் கொண்டு சேரமான் பெருமாள் தன்னாட்டுக்குத் திரும்பிய போதும் சோழநாட்டிலிருந்து கொங்கு நாடு திரும்பிய போதும் சோழநாட்டிலிருந்து கொங்கு நாடு சென்று பின்னர் மலைநாட்டில் உள்ள கொடுங்கோளூரை அடைந்தார் என்பதை அறியமுடிகின்றது. திருவஞ்சைக்களம் (திருவஞ்சிக்குளம்) போன்ற ஊர்கள் கொடுங்கோளூருக்குப் பக்கத்தில்தான் இருந்தன என்பதையும் அறியமுடிகின்றது.

அவிநாசியில் முதலையுண்ட பாலனை மீட்டுத் தந்த சுந்தரர் அங்கிருந்து (கொங்கு நாட்டிலிருந்து) மலைநாட்டுக்கு வருகின்றார். அவர் வந்ததைச் சேக்கிழார்,

"மலைநாட் டெல்லை உட்புகுதவந்த வன்றொண்டர்"
"மதிதங்கிய மஞ்சணி இஞ்சி வஞ்சிமணிவாயிலை
அணைந்தார்"
"பொன்னெடுந்தட மூதெயில் மகோதையில் புகுந்தனர்"
"குறுகினார் திருவஞ்சைக் களந்தன்னில்"

– வெள்ளானைச் சருக்கம் 19,22,27,38

எனப்பலபடப் பாராட்டுகின்றார்.

துங்கப்புரிசைக் கொடுங்கோளூர், இஞ்சி வஞ்சி, மூதெயில் மகோதை என்பனவற்றில் வரும் புரிசை, இஞ்சி, எயில் என்பன கோட்டை மதில் என்ற ஒரே பொருளை உணர்த்துவனவாகும். இவை அனைத்தும் ஒரு கோட்டை மதில் வளாகத்துக்குள் அமைந்த வேறு வேறு பகுதிகளாக இருக்க வேண்டும். 55 கிலோமீட்டர் சுற்றளவுள்ள ஒரு கோட்டை இருந்தது என்று கூறும் எஸ்.எஸ்.நந்தகுமாரின் செய்தி இங்கே ஒப்பு நோக்கிக் காணத் தக்கதாகும்.

புறம் 373 – ஆம் பாட்டு கோவூர் கிழார் பாடியது. இதன் திணை, துறை பற்றிய குறிப்பில் குளமுற்றத்து, துஞ்சிய கிள்ளி வளவன் கருவூரெறிந்தானைக் கோவூர் கிழார் பாடியது எனவருகின்றது. பாட்டினுள் கருவூர் பற்றிய குறிப்பேதும் இல்லை. முதலில் கொங்கு நாட்டை வென்ற செய்தியும், பின்னர்ச் சேரநாட்டை வென்ற செய்தியைக் கூறும்போது "வஞ்சி முற்றம் வயக்களனாக" போருடற்றி கருவூரைக் கைப்பற்றினான் என்றும் உரையாசிரியர் குறிப்பிடுகின்றார்.

அவர் 93 சதம் பாட்டிலும், புறம் 5–ஆம் பாட்டிலும் சேரமான் கருவூரேறிய ஒள்வான் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேரன் ஒருவன் கொங்குநாட்டுக் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த செய்தி தெரியவருகின்றது.

புறம் 373 – ஆம் பாட்டுக்கு உரை எழுதிய ஔவை.துரைசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய சிறப்புரையை ஈண்டுத் தருகின்றேன். அது பல ஐயங்களை அகற்றும் என்பதனால்.

விளக்கம் : குள்முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் கொங்கு புறம் பெற்ற (வென்ற) செய்தியும், வஞ்சி முற்றம் வயக்கனனாக வென்ற செய்தியும் இப்பாட்டின் கண் சிறந்தெடுத்துக் கூறப்படுகின்றன.

"கொங்கு நாட்டிற்கு மேற்கின் கண்ணதாய் மேலைக் கடற்கரையை அடுத்திருக்கும் வஞ்சிநகர் முற்றத்தே போருடற்றி மேம்படுதலின் "குடபுலத்ததரி" கொண்டனை என்றார். குடபுலமென்றும் வஞ்சியென்றும் கூறியவதனால், ஈண்டுக் கூறப்பம் வஞ்சி கருவூரான வஞ்சிநகர் அன்று என்பதாம். குடபுலத்து வஞ்சிநகர் இடைக்காலத்தே அஞ்சைக்களமென மருவி (5.1.1. Vol.No: 789) இப்போது திருவஞ்சிக்களமென வழங்குகின்றது.

சேரமான் கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரன் இரும்பொறை காலத்தே காவிரிக் கரையில் உள்ள கருவூர்க்கு வஞ்சி என்ற பெயரும், அமராவதி ஆற்றுக்கு ஆன்பொருநை என்ற பெயரும் அதற்கு வடகிழக்கில் காவிரியின் வடகரையில் உள்ள மூதூர்க்கு முசிறி என்ற பெயரும் உண்டாயின.

"கருவூர்க்கு உண்டான வஞ்சி என்ற பெயர் இப்போது வழக்கு வீழ்ந்தொழிந்தது. இடைக்காலத்தும் கருவூர் வஞ்சி நகரென வழங்கினமை "வீரசோழமண்டலத்து வெங்கால நாட்டுக் கருவூரான வஞ்சி மாநகர்" (AR No. 335 of 1927, 28) என்பதனால் அறியப்படும்.

"இவ்வளவனால் (குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்) எறியப்பட்ட கருவூர் மேலைக் கடற்கரையில் வஞ்சி நகர்க் கண்மையில் உள்ள கருவூர்"

திரு. ஔவை அவர்களின் கூற்றில் காணப்படும் கருவூர் வஞ்சி நகர்க்கண்மையில் இருந்த ஊர் என்ற கருத்து அனுமானமாகச் சொல்லப்பட்டதா? ஆதாரபூர்வமாகச் சொல்லப்பட்டதா என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும் இரண்டு வஞ்சிகளையும் பற்றிய தெளிவான சித்திரத்தை அவர் தீட்டிக்காட்டியுள்ளார் என்றுதான் கூறவேண்டும்.

ஒரே பெயரில் பல ஊர்கள் இருப்பது என்பது நாம் இன்றும் காணக் கூடியதுதான். எத்தனை தஞ்சைகள்? எத்தனை புதுக்கோட்டைகள்? எத்தனை ஆலங்குடிகள்? கருவூரோ அதன் ஒரு பகுதியோ வஞ்சி என்று வழங்கப்பட்டிருக்குமானால் அதில் ஒன்றும் வியத்தற்கில்லை. பல வஞ்சிகளிலே இதுவும் ஒன்று என்று சொல்லிவிடலாம். ஆனால் இதுதான் சேரர்களின் தலைநகராக விளங்கிய வஞ்சி என்பதுதான் பொருத்தமற்றதாக உள்ளது. சேரர்களின் ஒரு பிரிவினரான பொறையன் வழியினர் கொஞ்ச காலம் (கருவூரேறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை) கருவூரை வஞ்சி எனப் பெயர் மாற்றம் செய்து ஆண்டனர் என்பதற்காக எல்லாக் காலத்தும் இதுதான் சேரர்களின் தலைநகராக விளங்கிய வஞ்சி என்று சாதிப்பது பொருத்தமற்றது.

கொடுங்கோளூர், வஞ்சி, மகோதை, திருவஞ்சைக்களம் என்ற பகுதிகள் வஞ்சி அரண்மனையை ஒட்டி அமைந்த பல பகுதிகள்தாம் என்பதைக் கூர்ந்து நோக்குவார் அறிந்து கொள்ளலாம்.

கருவூர்தான் வஞ்சி என்றால் கொடுங்கோளூர், மகோதை

போன்ற பகுதிகள் இந்த வஞ்சியையும் (கருவூரையும்) சுற்றி அமைந்திருக்க வேண்டுமல்லவா? அப்படி ஏதேனும் அமைந்துள்ளதா என்று தெரியவில்லை.

இளங்கோவடிகள் தரும் செய்திகள் எப்படி நம்பகமானவையோ இவை போலவே சேக்கிழார் தரும் செய்திகளும் நம்பகமானவையே. ஏனெனில் அவர் சோழநாட்டின் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர். நாடுகள், ஊர்கள் ஆகியவற்றின் அமைவிடங்கள் பற்றி அவர் தெளிவாக அறிந்திருக்க வாய்ப்பு மிகுதி. பெரியபுராணத்தில் ஆதாரபூர்வமான செய்திகளை ஏராளமாகத் தந்துள்ளார். ஆதலின் சேக்கிழார் கூற்றும் ஏற்றுக்கொள்ளும் தகுதி படைத்ததே.

ஆக, சிலப்பதிகாரம் தரும் செய்திகளில் இருந்தும், பெரியபுராணம் தரும் செய்திகளில் இருந்தும், சேரர்களின் தலைநகரமாக விளங்கிய வஞ்சி மலைநாட்டில் (சேரநாட்டில்) அமைந்திருந்ததே தவிர கொங்கு நாட்டுக் கருவூரில் அமைந்திருக்கவில்லை என்பதை உறுதியாக அறிகின்றோம்.

அன்பான வேண்டுகோள்!

சமுதாய மாமுனிவராகத் திகழ்ந்த நமது அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஆழமான சிந்தனைகளை அடியொற்றி நடைபோடும் “மக்கள் சிந்தனை” மாத இதழ் மேலும் பலம் பெறுவதற்குத் தங்களின் ஆதரவு தேவை. நமது கருத்து பரவலாக மக்களைச் சென்றடைய இத்ழ் அவசியம்.

ஆயுள் சந்தாவாகவோ, அல்லது ஆண்டுச் சந்தாவாகவோ அல்லது புரவலர் தொகையாகவோ மக்கள் சிந்தனை இதழுக்கு வழங்கி மக்களின் சிந்தனைகளை அகம்கொண்டு வெளிவர உதவுங்கள். “மக்கள் சிந்தனை”யின் பணி சிறப்புடன் தொடர வாசகராக, படைப்பாளராக சந்தாதாரராக விளம்பரதாரராக மாறுங்கள்; இன்றே சமய சமுதாயப் பணியை வலிமைப்படுத்துங்கள்.

– ஆசிரியர்

உலகில் மிகக்கொடிய மிருகம் மனிதனே!

(முனைவர். க.ப. அறவாணன், முன்னாள் துணைவேந்தர்)

"ரீடர்ஸ் டைஜஸ்ட்" இதழில் ஸ்டீவ் இர்வின் என்பவர் எழுதிய பயணக் கட்டுரை இங்கே நினைவுகூரத்தக்கது. ஸ்டீவ் இர்வினும் அவருடைய நண்பர்களும் காட்டிற்குச் சென்றிருந்தனர். காட்டில் உள்ள விலங்குகளைத் தொலைவில் இருந்து நேரில் பார்ப்பது அவர்களது திட்டம். அதற்கு ஏற்ப காட்டிற்கு உள்ளே சென்று பெரிய மரத்தின் மேல் கிளையில் ஏறி அமர்ந்து கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தனர். அங்கங்கே விலங்குகள் ஓடுவதும், நடப்பதுமாக இருந்தன. ஓரிடத்தில் சிங்கங்கள் கூட்டமாகப் படுத்துக்கிடந்தன. வேடிக்கை பார்த்த கூட்டத்தில் இருந்த இர்வினுக்கு ஓர் ஆசை தோன்றியது. சிங்கக் கூட்டத்தின் அருகு சென்று ஒரு சிங்கத்தின் பிடரியைத் தடவிக்கொடுக்க அவர் விரும்பினார். நண்பர்களிடம் தெரிவித்தார். நண்பர்கள் அனைவரும் "ஐயையோ உயிரோடு திரும்ப உங்களுக்கு விருப்பமில்லையா?" என்று அஞ்சி உரைத்தனர். "எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் சென்றுவரத்தான் போகிறேன்" என்று மரத்தில் இருந்து கீழே இறங்கினார். அமைதியாகப் பதற்றம் எதுவுமின்றி சற்றே தொலைவில் படுத்துக் கிடந்த அந்தச் சிங்கக் கூட்டத்தை நோக்கி நடந்தார். சிங்கம் எதுவும் அசையவில்லை. சத்தம் எதுவும் எழுப்பவும் இல்லை. இவரை அவை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தன. அமைதியாக அருகில் சென்ற இர்வின் அங்கே படுத்துக் கிடந்த ஆண் சிங்கம் ஒன்றின் நெற்றியையும் பிடரியையும் மென்மையாகத் தடவிக் கொடுத்தார். அந்தச் சிங்கம் சாந்தமாக முகத்தைக் காட்டிக் கொண்டே இருந்தது. மரத்தில் அமர்ந்திருந்த அவருடைய நண்பர்கள் இக்காட்சியைப் பார்த்து வியந்து போனார்கள். தன் ஆர்வத்தை முடித்துக்கொண்ட இர்வின் நண்பர்கள் அமர்ந்திருந்த மரத்தடிக்கு வந்து மேலே ஏறி அந்தக் கூட்டத்துடன் கலந்து கொண்டார். அயர்ந்து போன அவர்கள் "எப்படி இவ்வளவு துணிச்சலாகச் சென்றீர்கள்" "அந்தச் சிங்கம் உங்களை ஒன்றும் செய்யவில்லையா?" என்று கேட்டார்கள். அதற்குப் பதில் இறுத்த இர்வின், "சிங்கம் ஒன்றும் ஒன்றும் செய்யவில்லை. நீங்கள் நினைப்பது போல அது மிகக் கொடிய மிருகம் அன்று. உலகத்தில் மிகக் கொடிய

மிருகம் மனிதனே" என்றார். மனிதனைப் பற்றி அறிந்துகொள்ள இவ்வுண்மைப் பயண நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டு.

அண்ணல் காந்தியடிகளின் சீடர் திண்டுக்கல்லைச் சேர்ந்த ஜே.சி. குமரப்பா ஆவார். ஆங்கிலத்தில் மிக வல்லவரான குமரப்பாதான் அண்ணல் காந்தியினுடைய சத்திய சோதனையை நல்ல ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க உதவினதாகச் சொல்வார்கள். காந்தியோடு குமரப்பா மிக நெருக்கமாகப் பழகினார். அவர் தன் கட்டுரை ஒன்றில் ஓர் அழகான நிகழ்ச்சியை விவரிக்கிறார். அந்நிகழ்ச்சி பின்வருமாறு : வெளியிலிருந்து ஊர் மக்கள் குமரப்பா இருந்த இடம் நோக்கி அவரைப் பார்க்க வந்திருந்தார்கள். அவர்களிடம் உரையாடிவிட்டு குமரப்பா தன் அறையில் பத்திரப்படுத்தியிருந்த மூன்று கண்ணாடிப் பேழைகளைப் பார்க்கச் சொன்னார். அவர்களும் அங்கு சற்றே தொலைவில் வைக்கப்பட்டிருந்த மூன்று பேழைகளையும் பார்த்தார்கள். முதல் பேழை: கண்ணாடிக்கு அடியில் ஒரு தேள் பாடம் செய்து வைக்கப்பட்டிருந்தது. அப்பேழையின் விளிம்பில் இப்பேழைக்கு உள்ளே இருக்கும் உயிருக்கு வாலில் நஞ்சு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அடுத்த இரண்டாவது பேழையில் உள்ளே ஒரு பாம்பு பாடம் செய்து வைக்கப்பட்டிருந்தது. அப்பேழையின் விளிம்பில் இப்பேழைக்கு உள்ளே இருக்கும் உயிருக்கு வாயில் நஞ்சு என்று குறிக்கப்பட்டிருந்தது. மூன்றாவது பேழையின் மேலே கண்ணாடிக்குப் பதிலாக முகம் பார்க்கும் கண்ணாடி வைக்கப்பட்டிருந்தது. பேழையின் விளிம்பில் இப்பேழைக்கு எதிரே நிற்கும் உயிருக்குக் கால் முதல் தலை வரை நஞ்சு என்று எழுதப்பட்டிருந்தது. அந்த இடத்தில் நின்ற உருவம் அதைப் பார்க்கச் சென்ற மனிதனுடைய உருவம் என்பது வெளிப்படை.

ஆங்கிலத்தில் ஒரு கவிதை. கவிதையின் தலைப்பு : இறந்து போன பைத்தியம் பிடித்த நாய் மேல் ஓர் இரங்கல் கவி. (An elegy on the death of a mad dog) இந்த நீண்ட கவிதைகயில் ஒரு சின்னம்சிறு கதை விவரிக்கப்படுகிறது. அக்கதை வருமாறு : நகரில் உள்ள செல்வன் ஒருவன் மிகச் செல்லமாக நாய் ஒன்றை வளர்க்கிறான். அச்செல்வன் மிகப்பெரிய கருமியாவான். எச்சில் கையால் காக்கை ஓட்டமாட்டான். அப்பேர்ப்பட்டவன் நிழலில் வளர்ந்த நாய்க்கு அவன் என்ன உணவு

கொடுப்பான் என்பது வெளிப்படையான செய்தி. போதி அளவு தன் நாய்க்கு அவன் உணவோ, தீனிகளோ, தருவது இல்லை. கொஞ்ச நாளில் நாய்க்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. தெருவில் போவோர் வருவோரை எல்லாம் கடித்துத் துன்பப்படுத்திக் கொண்டிருந்தது. ஊரில் உள்ளோரெல்லாம் அந்த நாயைக் கண்டு அஞ்சி ஓடினார்கள். ஒரு நாள் அந்நாய் தன்னை இதுவரை வளர்த்துவந்த எஜமானனைக் கடித்துவிட்டது. உடனே நாய் இறந்துவிட்டது. இக்கவிதைக் கதையின் பொருள் நாயை வளர்த்த கஞ்சக் கருமியான மனிதன் மிகக் கொடியவன் என்பதைக் காட்டுகிறது.

இக்கதைகளை மனத்துள் கொண்டும் நாட்டு நடப்புகளைக் கொண்டும் உலக நடப்புகளைக் கொண்டும் ஆராய்ந்து பார்த்தால், உலகில் உள்ள இன்னபிற உயிர்களை விட மனிதனே மிகக் கொடியவன் என்பது புரியும். எனவேதான் அவனைப் பயன்படுத்த பலவேறு சமயங்கள், பலவேறு நீதி நூல்கள் கருத்துரைகள் முதலானவை உலகில் தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன.

மாநிலத் திருவருட் பேரவைப் பொருளாளர்
திரு.எம்.எம். ஷாகுல் ஹமீது மறைவு

தஞ்சை மாவட்டத் திருவருட் பேரவையின் தொடக்ககால உறுப்பினரும் தஞ்சாவூர் மகாராஜா சில்க் உரிமையாளரும் பேரவையின் மாநிலப் பொருளாளருமான வள்ளல் ஹாஜி எம்.எம்.ஷாகுல் ஹமீது அவர்கள் 19.12.2014 அன்று சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் காலமானார். இப்பெருமகனாரின் மறைவு திருவருட்பேரவைக்குப் பேரிழப்பாகும். இவர், மத நல்லிணக்கச் சான்றோர் விருது பெற்றவராவார். இப்பெருமகனாரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கும் அன்பர்களுக்கும் மக்கள் சிந்தனை ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது. மறைந்த இப்பெருமகனாரின் நல்லுயிர் இறைவன் திருவடிநீழலில் இன்ப அமைதி பெற இறைஞ்சுகிறது.

— ஆசிரியர்.

துறவி தந்த திருமண வாழ்த்து

(**சொ. அருணன்**, முனைவர் பட்ட ஆய்வாளர், அழகப்பா பல்லைக்கழகம்)

17 ஆம் நூற்றாண்டில் தோன்றித் தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றி, தன்புகழ் நிலைத்திருக்கச் செய்தவர் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார்.

காஞ்சிபுரத்தில் குமாரதேசிகருக்கு மகவாகச் சிவபெருமான் அருளால் கருவிலே திருவாக அவதரித்தவரே சிவப்பிரகாசர். அவரோடு உடன்பிறந்தவர்கள் வேலையர், கருணைப்பிரகாசர், ஞானாம்பிகை ஆகியோர் ஆவர். இவர்களில் வேலையரும் கருணைப்பிரகாசரும் சிவப்பிரகாசரைப் போலவே கவிவரம் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைச் சிவப்பிரகாச சுவாமிகளின் தந்தையார் இயற்றிய,

கயல்வாய்த்த கண்ணி உலகீன்ற வல்லிபங் காவுனது
செயல்வாய்த்த அன்பர்க்கும் அல்லாத வர்க்குஞ் சிரிப்பல்லவோ
இயல்வாய்த்த எந்தைக்கு யான்வாய்த் ததுவும்இங்கு என்தனக்கு
வயல்வாய்த்த தும்மனை வாய்த்ததும் மைந்தர்கள் வாய்த்ததுமே

என்னும் பாடலாலேயே அறியலாம்.

தமிழைக் கற்கத் தொடங்கு முன்னரே திருவண்ணாமலை உறையும் ஈசனைப் போற்றி சோணசைலமாலை என்னும் அரிய நூலைப் படைத்தவர் சிவப்பிரகாசர்.

சிவப்பிரகாசர் தனது தமிழ்ப் பணிக்கு இல்லறம் ஒவ்வாதென எண்ணித் துறவு கொள்ள விழைந்தார். அண்ணாமலை ரெட்டியார் சிவப்பிரகாசரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டியபோது தான் துறவு வாழ்வை விரும்புவதாகவும் இல்லற வாழ்வை மறுப்பதாகவும் கூறி இரு பாடல்களை இயற்றினார். அப்பாடல்கள் சிவன் மன்மதனை எரித்ததற்கு ஒப்பான நிகழ்வாகும்.

சேய்கொண் டாரும்கமலச் செம்மலுடனே அரவப்
பாய்கொண் டானும்பரவும் பட்டீச் சுரத்தானே

நோய்கொண் டாலும்கொளலாம் நூறுவயது அளவிருந்து
பேய்கொண் டாலும்கொளலாம் பெண்கொள்ளல் ஆகாதே!

தாமரை மீதிருக்கும் பிரமனும் பாம்புப் படுக்கை மீதிருக்கும் திருமாலும் துதிக்கும் பட்டீச்சுரம் உறைபவனே! நோய்வாய்ப்பட்டாலும் படலாம்! நூறு வயதிருந்து பேய்வாய்ப்பட்டாலும் படலாம்! ஆனால், தமிழை முதலாகக் கொண்ட யான் (உன்னையே முதலாகக் கொண்டவன்) பெண்ணைத் திருமணம் செய்தல் ஆகாது என்று பதில்தந்தார்.

பெண்ணைப் பாகமாக உடைய சிவபெருமானது பக்தர் ஏன் பெண்ணை வாழ்க்கைத் துணைநலமாக ஏற்கும் இல்லறத்தை மறுத்தார்? தனித்திருந்து தவமியற்றும் தமிழ்முனிவர்கள் பெரும்பாலும் பெண்ணைத் தவிர்த்து நின்றார்களே ஒழிய மறுத்து நிற்கவில்லை. ஆதலால், தன் தமிழ்க்காதல் பெண்ணாலே குன்றும் எனக் கருதித் திருமணம் செய்வதைத் தவிர்த்தார் சிவப்பிரகாசர். மேலும் திருமணத்தைப் பற்றிக் கூறும்போது அடுத்த பாடலில்,

நிட்டையிலே இருந்துமனத் துறவடைந்த பெரியோர்கள்
நிமலன்தாளைக்
கிட்டையிலே தொடுத்து முத்தி பெறுமளவும் பெரியசுகம் கிடைக்கும்
காம
வெட்டையிலே மதிமயங்கும் சிறுவர்க்கு மணம்பேசி விரும்பித் தாவிக்
கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டும் கவலை
தானே

யோக நிலையிலிருந்து துறவு பூண்டோர்கள் சிவபெருமான் திருவடியை அடைவதையே முக்தியாகவும் பெரிய சுகமாகவும் கருதுவர். காமவேட்கையில் மதியிழக்கும் சிறியோர்கள் திருமணத்தின்மீது விருப்புக் கொண்டு மணமேடை தொடங்கி அது முதல் சுடலையில் பிணமேடையில் கொணர்ந்து கிடத்தும் வரையில் கவலை மட்டும்தானே மிச்சமாகும் என்றும் பாடுகிறார்.

தான் பெரிதினும் பெரிது கேட்கும் பெரியோனாகவே விரும்புவதையும், தமிழ்த்தொண்டு புரிவதையே முதலாகக் கருதுவதையும் சிவப்பிரகாசர் தம் பாடல்கள் மூலம் ரெட்டியாருக்கு உணர்த்தினார்.

ஆனால், வேலையர் மற்றும் கருணைப்பிரகாசர் கருத்துகளோ வேறாக இருந்தன. அவர்களும் கருவிலே திருவுடையவர்கள்தானே! வேலையர் விருப்போ, வெறுப்போ இன்றிச் "சிவப்பிரகாசர் என்ன சொல்வாரோ அதன்படித் தான் நடப்பேன்" என்றார்.

கருணைப்பிரகாசர் தனது கருத்தாக,

நாணி என்பதை நாரிஎன் றுரைத்திடும் நகையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது என்றால்
காணல் ஆவதோர் உருவமெய்ந் நாரியைக் கண்டால்
பூணு வார்மயல் காளையர் என்பதும் புதிதோ!

"நாணத்தைப் போக்கிக் கொள்ளப் பெண் வேண்டும் என்னும் ஆசையால், மூங்கில் வளைந்து ஒடுங்குதல் போல, காணவேண்டிய மெய்யான பெண்ணுருவைக் கண்டால் காளையர் மையல் பூணுவது புதில்லையே! என்று தனக்குத் திருமணம் செய்து கொள்ள விருப்பமே!" என்பதைத் தன் பாடலில் தெளிவுபடுத்தினார்.

இளவல்கள் இருவரின் கருத்தையும் புரிந்து கொண்ட சிவப்பிரகாசர் தாம் துறவுபூண்டு தம் தம்பியர்க்கு மணம் புரிவித்துத் திருமண வாழ்த்தாக ஐந்து பாடல்களை இயற்றினார். அது துறவி தந்த திருமண வாழ்த்தாக இல்லற வாழ்வைப் புதிய கோணத்தில் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. புராணக் கவிதைகளின் தொகுப்பாக விளங்கும் இப்பாடல்களின் சான்றுகள் தமிழில் இதுவரை அமையாத கற்பனை ஓவியமாக அமைந்து சிவப்பிரகாசருக்குக் கற்பனைக் களஞ்சியம் என்னும் புகழ்மொழியை உறுதி செய்வதாக அமைகிறது. இல்லறவாழ்வைச் சிறப்பிப்பது போலவும் அதில் உள்ள குறைபாடுகளைச் சுட்டியும் பாடல் எழுவது இன்னும் அழகு.

பெருங்குடும்பன் சிவன்

சிவபெருமான் காமனை எரித்தபோதும் பெண்ணாசையில்லாதவர் என்று சொல்லிவிட முடியாது. தென்பாலுகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெண்பாலும் உகந்தவன்தானே! பெண்ணாசை கொண்டோர் இயல்பைச் சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் நடந்த உரையாடலாக்கி முதல் பாடலாக வாழ்த்துகிறார்.

ஐயநின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை
யாரென்ன உமை வினவவும்
அன்னதொரு மடமங்கை யன்றுவெண் திரைகொழித்து
அழகொழுகு தண்புனல் எனத்
துய்யஒளி ஆநராங் கரியவ்விழி காதுவாய்
தோயத்தில் உண்டோஎனச்
சொல்லரும் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை
தூயசெங் குமுதம் என்னப்
பொய்என நினைத்துநற் கொங்கையும் கூந்தலும்
புனலிடை யுண்டோ எனப்
புற்புதஞ் சைவலமது எனவே மறுத்துப்
புகன்றிடுதி நங்காய் எனத்
தையலவ ளேனென்ன நாணொடு வணங்கியென்
தன்பிழை பொறுத்திடேன்ற
சங்கரன் உரைத்திடத் திருவுள மகிழ்ந்த
சிவசங்கரி உமைக் காக்கவே!

"சிவபெருமானே! உன் சிரமீது இருக்கும் இளம்பெண் யார்?" என உமை கேட்க, "அவள் இளம்பெண் அல்லள், வெள்ளலைகள் வீசி குளிர்ந்த நீரால் தூயஒளியோடு விளங்கும் முகம், கருங்கண்கள், காதுகள், வாய் இவையெல்லாம் சேர்ந்து உனக்குப் பெண்ணாகத் தெரிகின்றனவோ? இவையெல்லாம் நீருக்குண்டோ? தாமரை, கருங்குவளை, வள்ளை, செவ்வல்லி எனப் பொய்யாய் நினைத்து கொங்கையும் கூந்தலும் நீரிடத்தில் தெரிகின்றனவோ?" என்று மாற்றிக் கூறி, "அவையாவும் நீர்க்குமிழும் பாசியும்" என்று மறுத்துச் சொல்க! எனக் கங்கையிடம் சொன்னார் சிவபெருமான். மேலும் "உமையிடம் இன்னும் கேள்" என்று சொன்னார். "அவளைப் பெண் என்றுதானே கூறுகிறார்? என உமை சொல்ல, பெண் என்றதும் தன்னைத்தான் அழைக்கிறார்கள் என நினைத்துக் கங்கை ஆமெனவும் சங்கரன் நாணமடைந்து பிழை பொறுக்க வேண்டினார். சிவனைப் பொறுத்த சிவசங்கரி உம்மைக் காக்கட்டும்.

பெண் என்பவள் நீர்க்குமிழும் பாசியுமே! அதில் மூழ்கி இன்படைவார் என்ன கண்டார்? என்பதுதான் சிவப்பிரகாசரின்

பாடற்செய்தி. ஆயினும் காமனைக் காய்ந்த சிவபெருமானே கங்கையைச் சூடினார் என்றால் நாம் யார்? நீவிரும் அவ்வாறே விருப்புற்றீர். சிவசங்கரி உமைக் காக்கட்டும் என்று வாழ்த்துகிறார்.

பிள்ளையும் குட்டியும்

கிராமப்புறங்களில் சொல்லப்படும் வழக்குச் சொல்லான "பிள்ளைகுட்டிக்காரன்" என்பது குடும்பவாழ்வில் ஈடுபடுவனுக்குரியதாகும். சிவபெருமானும் உமாதேவியும் தமது பிள்ளைகளின் திருவிளையாடல்களை எண்ணி மகிழ்ந்திருந்தார்கள். அவ்வாறே நீங்களும் வாழ்க என்று அடுத்த பாடலில் வாழ்த்துகிறார்.

அரனவன் இடத்திலே ஐங்கரன் வந்துதான்
ஐயஎன் செவியை மிகவும்
அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்
அத்தன்வே லவனை நோக்கி
விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்
விளங்குகண் எண்ணினன் என
மருவும்என் கைந்நீள முழம்அளந் தான்என்ன
மயிலவன் நகைத்து நிற்க
மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்
மைந்தரைப் பாராய் எனக்
கருதரிய கடலாடை உலகுபல அண்டம்
கருப்பமாய்ப் பெற்றகன்னி
கணபதியை யருகழைத்து அகமகிழ்வு கொண்டனள்
களிப்புடனே உமைக் காக்கவே.

சிவபெருமானிடத்தில் ஐங்கரன் வந்து "முருகன் என் காதினை வலிக்கும்படிக் கிள்ளினான்" எனச் சிணுங்க, வேலவனிடம் அவர் ஏனென்று கேட்க, "அண்ணன் என்தலையில் உள்ள கண்களைக் கணக்கிட்டான்" எனப் பதில் கூறினான். "நீ ஏன் அவ்வாறு விகடம் செய்தாய்?" எனச் சிவபெருமான் கேட்க, "முருகன் என் துதிக்கையின் நீளத்தை முழம் போட்டான்" எனச் சொல்ல, இதைக் கேட்ட முருகன் சிரித்தபடி நிற்க, சிவபெருமான் உமையவளை நோக்கி, "கடலாடை தரித்து உலகைக் கருவுற்ற தேவியை அழைத்து நும் புதல்வர்களைப் பாராய்"

என்றதும் அவள் கணபதியை அணைத்து அகமகிழ்வு கொண்டாள். அதுபோல் உம்மையும் காக்க!

இல்லற வாழ்வில் சண்டைகளும் சச்சரவுகளும் கூடச் சந்தோசமாக இருப்பதைச் சிவபெருமான் குடும்பத்திலிருந்தே சிவப்பிரகாசர் கற்பனை நயம்பட எடுத்துக்காட்டி வாழ்த்துகிறார்.

தலைவனும் தலைவியும்

எவ்வளவு சிறப்புடையவனாக இருந்தாலும் கணவனின் பலவீனங்கள் அனைத்தும் அறிந்தவள் மனைவிதானே. கணவனுக்கும் மனைவிக்கும் (சிவபெருமானுக்கும், உமைக்கும்) இடையில் நடக்கும் உரையாடல் ஊடலாகவும், ஏசலாகவும் அமைய அவர்களைப் போல இன்புற்று வாழ்க என்று வாழ்த்தி மூன்றாவது வாழ்த்துப் பாடல் எழுகிறது.

அரன்தன்னை நோக்கிஉன் ஆபரணம்
அரவம்என உமையை நோக்கி
அரியரவ சயநத்தை அரவுருவ மானத்தை
அறியாய்கொல் சிறிதும் என்ன
நம்பிமனை தொறும்இரந் துணும்ஆண்டி நீயென்ன
நான்தாதன் அறிவேன் என
நவையுறும் பொய்புகன்று ஈதெனப் பாரதம்
நடந்ததே கரியாம் என
வெம்பிஒரு வன்பிரம் பால்அடித் தான்என
விளங்கிழை ஒருத்தி தாம்பால்
வீசினது சொல்என்ன எண்ணா யிரம்பெண்கள்
மிகுகற்பை நீக்கினை எனப்
பம்புகற் பினில் ஓரிரட்டிப்பு நீக்கினது
பதறாமல் நீகேளெனப்
பரமருடன் இவ்வாறு விளையாடு பச்சைப்
பசுங்கொடி உமைக் காக்கவே.

உமை சிவனை நோக்கி, "உனக்கேன் அரவம் ஆபரணம் ஆயிற்று?" எனக் கேட்க, "திருமால் பாம்பைப் படுக்கையாய்க் கொண்டதையும் ஆதிசேடன் உருவமாகக் கொண்டதையும் அறியாயோ?"

என்றார். அதற்கு உமை மேலும், "நீ வீடெங்கும் இரந்து திரியும் ஆண்டிதானே! எனக் கேட்க, நான் தந்தையும் தலைவனும் ஆனேனே!" என்றார். "குற்றமுடைய பொய்புகன்று அடிபட்ட வடு உமக்கு உண்டே அது சாட்சிதானே!" எனவும், "சினத்தால் ஒருவன் அடித்த தடம்" என்றார் சிவபெருமான். "பெண்ணொருத்தி தாம்புக் கயிற்றால் அடித்தாளே அது என்ன?" எனக் கேட்க, "எண்ணாயிரம் பெண்கள் மிகு கற்பினை நீக்கினேன்" என்று இவ்வாறு இருவரும் வாய்ச்சொல்லாடி மகிழ்ந்தனர். அவ்வாறு விளையாடி மகிழ்ந்த உமை "உம்மைக் காக்கட்டும்" எனக் குடும்ப வாழ்வில் கிடைக்கும் அனுபவங்களை இருவரும் பகிர்ந்து கொள்வதாய் இப்பாடல் வாழ்த்தோடு அமைகிறது.

புதுவாழ்வு தொடங்கும்

இதுவரை செய்து வந்த தொழில்கள் மாறி, நோக்கங்கள் வேறாகும்படி குடும்ப வாழ்வு செய்துவிடுகிறது. அப்படிப்பட்ட புதிய திட்டமிடலாகச் சிவபெருமானும், உமையும் உரையாடுவதும் புதுவாழ்வைத் தொடங்குவதும் இனிமையாக இருக்கிறது. அவ்வாறே நீங்களும் வாழ்க என வாழ்த்தி நான்காவது வாழ்த்துப் பாடலைத் தருகிறார்.

அச்சுதன் அளிப்பவன் நிலம்உமது நேயன்வித்தை
அருளுவன் பலபத் திரன்
அலமுதவு வன்சமன் பகடுஈவன் நம்தமக்கு
ஆனதோர் எருதும் உண்டே
முச்சிரம் அயிற்படையினைக் கொழுவ தாக்குவோம்
மொய்ம்புடன் இழுத் திறுக்க
முந்திய வடக்கயிற் றுடன்மற்றும் நமதுஅன்பர்
முன்போய் இரந்து கொள்வோம்
இச்சையுடை நமதுஇளைய தனயன்ஆ கியகந்தன்
இனிமை யொடுமாடு மேய்ப்பன்
இனிஉழுது பயிரிடுதல் நன்றுநன்று இதைவிட்டு
இரந்துண்பது ஈனம் எனவே
கச்சுமுலை மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுள்ளத்தில் இதுநற்
காரியமெனக் கருதி மெத்தக் களித்திடும்
கண்ணுதல் உமைக் காக்கவே.

உமையம்மை சிவபெருமானிடம், "திருமால் நிலம் தருவான்; குபேரன் விதை தருவான்; பலராமன் கலப்பை தருவான்; நம்மிடம் எருதும் உண்டே! சூலத்தைக் கொழுவாகச் சமைத்துக் கொள்வோம். வடக்கயிறு முதலிய வேண்டியன யாவற்றையும் அன்பரிடம் இருந்து பெற்றுக்கொள்வோம். நமக்கு விருப்பமான கந்தன் ஆடு மேய்க்கட்டும்! இனி உழுது பயிரிட்டு உண்ணலே நன்று. இதனை விடுத்து விட்டு யாசித்து உண்பது ஈனம்" என்று கூறினாள். இதை ஏற்று "இது நல்ல செயல்" எனக் களிப்புற்று மகிழும் சிவபெருமான் உங்களைக் காக்கட்டும் என வாழ்த்துகிறார்.

பெண்களின் உரையாடல்

இல்லறத்துப் பெண்கள் தங்கள் கணவர்களின் செயல்பாடுகளைத் தமக்குள் கலந்து அங்கலாய்ப்பது இயல்பே. இது இனிமையுடையதாகவும் அமையும். மலைமகளும் அலைமகளும் தங்கள் கணவர்களாகிய (சிவபெருமானையும், திருமாலையும்) குறித்த செயற்பாடுகளைப் பகிர்ந்து கொள்வதாக அமைகிறது இந்த வாழ்த்துப் பாடல்.

கவுரிகம லாய்அரன் இரந்தசோறு உணவுஎனக்
கமலைமண் கண்டேன் எனக்
காளைஒன்றே அரற்கு எனமாடு மேய்த்துஅதைக்
கட்டுஇடையன் ஆரோஎனச்
சிவன்ஒருவர் தூதுஎன்ன அத்தூது சென்றகதை
செப்பில்ஒரு பாரதம்எனச்
சேர்ஓடு திருடினான் அரன்எனக் கட்டுண்ட
செய்திநாம் அறிவோம்என
அவையில்நட மாடினான் அரன்என்ன அவ்ஆடல்
அரவம் அறியாதோஎன
ஆலம்அதை உண்டனன் அரன்என்ன மண்உண்ட
அதனைஅறி யாமோ என
விவரமொடு மலைமகளும் மலர்மகளும் இவ்வாறு
விளையாடு மிவர்கள் துணைஆ
மேவிவரு புத்ரமித் திரகளத் திரருடன்
மேன்மேலும் மிக வாழியே!

உமாதேவி திருமகளுடன் பேசிக்கொண்டிருந்தபோது, "சிவன் அன்னத்தை இரந்து வருவான்?" என்றாள். அதுகேட்ட திருமகள், "திருமால் கொண்டுவந்தது மண் எனக் கண்டேன்" என்றாள். உமை, "சிவனிடம் இருப்பது ஒரு காளை மட்டுமே" என்றாள். அதற்குத் திருமகள், "திருமாலோ மாடுகளை மேய்த்து அதனைக் கட்டும் இடையன்" என்றாள். உமை, "சிவன் (சுந்தரர்க்காகப் பரவை நாச்சியாரிடம்) பெண்ணொருத்தியிடம் தூது போனான்" என்றாள். திருமகள், உடனே, "திருமால் பெண்ணுக்காகத் (திரௌபதிக்காகக் கௌரவர்களிடம்) தூது போன கதை பெரிய பாரதமே ஆயிற்றே" என்றாள் திருமகள். உமை, "சிவன் தான் தந்த ஓட்டைத் தானே திருடிக் கொண்டவன்" என்றாள். அதற்குத் திருமகள், "திருமால் வெண்ணெய் திருடி உரலில் கட்டுப்பட்டவன்? என்றாள். உமை, "அவையில் நடமாடுவான்" என்றாள். திருமகளோ, "திருமால் ஆடியதைப் பாம்பே அறியும்" என்றாள். உமை, "சிவபெருமான் விடத்தை உண்டான்" என்றாள். "திருமால் மண் உண்பானே" என்றாள் திருமகள். இவ்வாறு தங்கள் கணவர்களின் பெருமைகளை(?)க் கூறி மகிழும் இப்பெண்களைப் போல, நீங்களும் பெண்களை மணந்து திருமண வாழ்வில் இன்புற்று மேன்மேலும் வாழ்கவே! என்று தனது நிறைவு வாழ்த்துப் பாடலைத் தருகிறார்.

தான் துறவு மேற்கொள்ள உறுதி கொண்ட அதே நேரத்தில் தனது தம்பியர் திருமண வாழ்வை மேற்கொள்வதும் ஆகிய இடைநிலையில் துறவு நிலையிலிருந்து அவர்களை வாழ்த்திய வாழ்த்து அருமையான கற்பனை ஓவியம். தமிழுக்கு இத்தனை நயமான தகுதியைத் தந்த கற்பனைக் களஞ்சியத்தைப் போற்றுவதும் அப்பாடல்களின் அருமை உணர்ந்து மகிழ்வதும் நமது பேறல்லவா!

(சிவப்பிரகாச சுவாமிகள் புரட்டாசி மாதம் நிறைமதி நாளில் நிறைவெய்தினார்)

> சிறந்த முறையில் பணிகளை செய்வது என்ற பழக்கம் மன வலிமையையும், தன்னம்பிக்கை குணத்தையும் ஏற்படுத்தும். இதனால் ஒவ்வொரு நெருக்கடிகளையும் சந்திக்கும் போதும், தற்காலிக தாழ்வுகள் ஏற்படும் போதும் தாக்குப் பிடித்து நிற்க முடியும்.
>
> – பால் ஜெ. ஃபபளையர்

நான் யார்?

(கா. கருப்பையா, பி.ஏ.)

எத்தனை காலங்கள்
வாழ்ந்தாலும்
எப்படி வாழ்ந்தார்
என்பதைத் தான்
இறுதி யாத்திரையில்
பேசை வைக்கும் -

கடமைகளை ஒழுங்காகச்
செய்தவரா
காலத்தை வீணாகக்
கழித்தவரா
என்பதையும் இறுதியிலே
பேச வைக்கும்

ஊருடனே ஒன்று கூடி
வாழ்ந்தவரா
உதவாத நச்சுமரம்
ஆனவரா?
என்பதையும் இறுதியிலே
பேச வைக்கும்

பண்பாட்டுச் சீரழிவில்
உழன்றவரா?
அன்போடு அரவணைத்து
வாழ்ந்தவரா?
என்பதையும் இறுதியிலே
பேச வைக்கும்

நாட்டுக்கு அவர் செய்த
சேவை என்ன?
வீட்டுக்கு விட்டுச் சென்ற
உடைமை என்ன?
என்பதையும் இறுதியிலே
பேச வைக்கும்

நல்லவராக கெட்டவரா
நாடு சொல்லும்
வல்லவராய் வாழ்ந்தவரா
வரலாறு சொல்லும்
நான் யார் நான் யார்
என்று நீ எண்ணிப் பார்
நலமடைவாய் பலமடைவாய்

பனியிலே குளிர் உண்டாகிறது. வெயில் உடல் எரிச்சலைத் தருகிறது. வறுமையும் அப்படித்தான். அதை அனுபவிப்பவர்களுக்கு வேதனை ஊட்டி அவர்களின் சுபாவத்தை மாற்றுகிறது. தர்மபிரபுக்கள் என்று சிலரும் தரித்திரப் பூச்சிகள் என்றும் பலருக்கு இருக்கும் வரையில் மனித சுபாவமும் அந்தப் பொருளாதார நிலைக்கு ஏற்றபடிதான் அமையும்.

\- அறிஞர் அண்ணா

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்கக் கோரி தஞ்சாவூர் - தமிழ்த்தாய் அறக்கட்டளை ஏற்பாட்டில் தமிழகக் குழுவினர் தில்லிப்பயணம்

தஞ்சாவூரில் செயல்பட்டு வரும் தமிழ்த்தாய் அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பாக தமிழகக் குழுவினர் 13 பேர் புதுதில்லிக்கு கடந்த 08.12.2014-இல் புறப்பட்டுச் சென்றனர்.

10.12.2014 அன்று புதுதில்லி சென்ற பயணக் குழுவினரை தில்லி தொடர் வண்டி நிலையத்தில் தில்லித் தமிழ்ச்சங்க நிருவாகிகள் மாலையணிவித்து வரவேற்றனர். திருக்குறளுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்து வரும் உத்தரகாண்ட் மாநிலங்களவை உறுப்பினர் தருண் விஜயை சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். மேலும் அவரது தமிழ்ப் பணியைப் பாராட்டி திருவள்ளுவர் உருவ கருங்கல் சிலையை நினைவுப் பரிசாக வழங்கினர். பின்னர் நடுவண் அரசின் கப்பல் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் மாண்புமிகு பொன்.இராதாகிருட்டிணன் அவர்களைச் சந்தித்து கோரிக்கை மனு கொடுத்தனர். அமைச்சருக்கு திருவள்ளுவர் உருவம் பதித்த சலவைக் கல்லை அன்பளிப்பாக வழங்கினர். அமைச்சர் அதை அலுவலகத்தில் நிரந்தரமாக காட்சிப்படுத்தினார்.

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்கவும், திருவள்ளுவர் சிலையை நாடாளுமன்றத்திலோ அல்லது தில்லி நகரின் முக்கிய சாலைகளில் ஏதேனும் ஒன்றிலோ நிறுவ வேண்டும் என்றும் அமைச்சரிடம் விண்ணப்பம் மனு கொடுத்தனர். அனைவரையும் உபசரித்த அமைச்சர் ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

மறுநாள் 11.12.2014 அன்று மகாகவி பாரதியாரின் 133ஆவது பிறந்தநாளை நடுவண் அரசு முதன் முதலாக அரசு விழாவாகக் கொண்டாடியது. தில்லிச் தமிழ்ச்சங்க நிருவாகிகள் அதற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர். இவ்விழாவில் கலந்து கொண்ட நடுவண் அமைச்சர் மாண்புமிகு வெங்கையா நாயுடு அவர்களிடமும் விண்ணப்பம் அளித்தனர்.

13.12.2014 அன்று ஆக்ரா சென்ற தமிழகப் பயணக்குழுவினர் தாஜ்மகாலில் கவியரங்கம் நடத்தினர். இதுவரை எந்த மொழிக் கவிஞர்களும்

ஒன்று கூடி ஓரிடத்தில் அமர்ந்து கவியரங்கம் நடத்தியதாக வரலாறு இல்லை. அந்தப் புதிய வரலாற்றை தமிழ்மொழி இதன் மூலமாகப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

தில்லிப் பயணத்திற்கான ஏற்பாடுகளை தஞ்சாவூர் – தமிழ்த்தாய் அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் உடையார் கோயில் குணா செய்திருந்தார். விழுப்புரம் மாவட்டத் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் கவிமாமணி துரை. இராசமாணிக்கம் தலைமையில் பாவலர் ப.கோ. நாராயணசாமி, கவிஞர். தாமரைப் பூவண்ணன், கவிஞர்.குடியாத்தம் குமணன், கவிஞர் தகடூர் தமிழ்க்கதிர், இரா. மும்தாஜ்பேகம், க. மல்லிகா, சி.க. மணி, இல. தட்சிணாமூர்த்தி, செ.ப. சுந்தரம், ம. இராதாகிருஷ்ணன், உ. சிவகாமி ஆகியோர் இப்பயணத்தில் கலந்து கொண்டனர். அகில இந்திய தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் இரா. முகுந்தன், தில்லித் தமிழ்ச்சங்கத் தலைவர் வி.பாலசுப்பிரமணியன், பொதுச்செயலாளர் ந. கண்ணன் மற்றும் நிருவாகிகள் இக்குழுவினர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்தனர். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பயணக்குழுவினரை வாழ்த்திக் கடிதம் அனுப்பி ஊக்கப்படுத்தி இருந்தார்கள்.

மந்திர உரை

சங்கப்புலவன் கணியன் பூங்குன்றன் பாடிய "யாதும் ஊரே" என்று தொடங்கும் புறநானூற்றுப் பாட்டுக்கு (192) பெரும்புலவர்களும், பேராசிரியப் பெருமக்களும் எத்தனையோ பல உரைகள் எழுதினர். 5.1.2015 ஆம் நாள் தேவகோட்டை ஆனந்த கல்லூரியில் தனிநாயக அடிகள், கால்டுவெல் அய்யர் குறித்த ஆய்வுக் கருத்தரங்க நிகழ்வில் பங்கேற்ற தவத்திரு குருமகாசந்நிதானம் பொன்னம்பல அடிகள் ஓர் உரைக் குறிப்பை நல்கினார்கள். உரையின்போது,

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற நான்குசீர் பாடல் அடி சாதாரணமான தொடர் அல்ல; இது ஒரு மகாமந்திரம்; இதனை மாணவர்களும் இளைஞர்களும் "வாழ்க்கை மந்திரம்" எனப் போற்றிக் கொள்ளவேண்டும் என்று மொழிந்தார்கள். "மகாமந்திரம்" என்ற உரை ஆக்கமும் "வாழ்க்கை மந்திரம் ஆக்குக" என்று வேண்டுகோளும் அடிகள் வழங்கிய மிகச்சிறந்த "மந்திர உரை" ஆகும்.

செய்தி : "மு.மு"

"எழுத்து என்பது நமக்கு மருந்தும் விருந்தும் ஆகும்!"

தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வாழ்த்துரை

(28.12.2014ஆம் நாள் காரைக்குடியில் நடந்த உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கம் - சிவகங்கை மாவட்டக்கிளையின் 22ஆம் ஆண்டு விழாவில், "அறமனச் செம்மல்" பழ.படிக்காசு அவர்களுக்கு "ஆன்மிக மாமணி" என்ற விருதும், பேராசிரியர் நா.சுப்பிரமணியன் அவர்களுக்கு "ஆய்வு மாமணி" என்ற விருதும், கவிஞர் ஆ.குறள்பித்தன் அவர்களுக்குப் பொற்கிழியும் சங்கத்தின் சார்பில் வழங்கித் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆற்றிய பேருரையின் சுருக்கச் செய்தியாக்கக் கட்டுரை.)

உலகத்தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் காரைக்குடிக் கிளையும், கிளையின் பொறுப்பாளர்களும் தொடர்ந்து நல்லதோர் "அறிவுவேள்வி"யைச் செய்து வருகிறார்கள். இது ஓர் அரிய அர்ப்பணிப்புப் பணி. சங்கத்துக்கும் சங்கப் பொறுப்பாளர்களுக்கும் நமது பாராட்டுக்கள் உரியன. இந்த எழுத்தாளர் சங்கம், பேச்சுப்பணியைக் காட்டிலும் எழுத்துப்பணியைத்தான் வரவேற்றுப் போற்றுகிறது என்று குறிப்பிட்டார்கள். ஆண்டுவிழாவில் பேச்சுக்கு அல்லது பேச்சாளர்களுக்கு முன்னுரிமைஇல்லை என்றும், எழுத்துக்கும் எழுத்தாளர்களுக்கும்தான் முதன்மையும் முன்னுரிமையும் உண்டு என்றும் குறிப்பிட்டார்கள். குன்றக்குடிபொன்னம்பல அடிகள் "மக்கள் சிந்தனை" என்ற சமுதாயச் சிந்தனை ஏட்டில் தொடர்ந்து தலையங்கமும் கட்டுரையும் எழுதுவதால்தான், அதுவும் சிறப்பாக எழுதுவதால்தான் எழுத்தாளர் சங்க ஆண்டுவிழாவுக்குத் தொடர்ந்து அழைக்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். ஆக, "நாமும் சிறிது சிறிது எழுதுகிற எழுத்தாளர்" என்பதை நமது எழுத்தாளர் சங்கம் அங்கீகரித்திருக்கிறது என்பது தெரிகிறது. (பலத்த கரவொலி).

எழுத்துக்கு என்று ஒரு தனித்த பெருமை இருக்கிறது. எழுதும்போது ஓர் எழுத்தாளர் தனது சுமைகளையெல்லாம் இறக்கி வைத்தவர் ஆகிறார். நெஞ்சத்தின் சுமை இறங்குகிறது; குறைகிறது; அந்த இலக்கிய அனுபவம் உலகத்து எழுத்தாளர்கள் அனைவருக்கும் நிகழ்ந்துள்ளது. அப்படி, சமுதாய

ரீதியிலான தமது நெஞ்சச் சுமைகளையெல்லாம் எழுத்துவடிவத்தில் இறக்கி வைத்த எழுத்தாளர் வரிசையில் நமது மகாகவி பாரதி வகிக்கும் இடம் மகத்தானது. "நமக்குத் தொழில் கவிதை" என்றும் "என்னைப் புதிய உயிராக்கு" என்றும், "செல்லம்மா, கவலைப்படாதே, கவலை வரும்போதெல்லாம் தமிழைப்படி" என்றும், "தமிழ் எழுத்து கவலை தீர்க்கும் மருந்து" என்றும் மகாகவி பாரதி எழுதி எழுதி எண்ணங்களையெல்லாம் இறக்கி வைத்தான். அண்ணல் காந்தியடிகள் நெஞ்சம் முழுவதும் சுமைகளை சுமந்து நடந்தவர்; அனைத்தையும் பக்கம் பக்கமாய் எழுத்தாக்கிக் குவித்தவர். தென் ஆப்பிரிக்காவில் அவர்பட்ட துன்பங்கள் துயரங்கள் கொஞ்சமா? ஏற்ற சுமைகள் கொஞ்சமா? தென் ஆப்பிரிக்க அரசும் நிர்வாகமும் விரட்டி, விரட்டி, தூக்கி எறிந்து பெருந்துன்பத்தை, பெரிய அவமானங்களை அவருக்கு அளித்தது. டர்பன் நகர ஆளுநர் காந்தியடிகளைப் பார்த்து, "துன்பங்களைத் தவிர்க்க நீங்கள் பகல் நேரப் பயணங்கள் தவிர்த்து, இரவு நேரப் பயணங்களை மேற்கொள்ளலாமே" என்று சொன்னபோது, காந்தியடிகள் மறுத்துவிட்டார். "இரவில் பயணம் செய்ய நான் கோழையல்ல, பகலில்தான் பயணம் செய்வேன்; இது மனித உரிமை சம்பந்தப்பட்ட நிகழ்வு" என்றார். தென் ஆப்பிரிக்காவில் தமிழர்கள் பட்டபாடுகளை, சந்தித்தப் போராட்டங்களையெல்லாம் அண்ணல் காந்தி எழுத்தாக்கி வைத்திருக்கிறார். "நான் தமிழ் கற்க விரும்புகிறேன்" என்றார். சமுதாய உரிமைகளுக்காகச் சுமைகளை ஏற்பதும், அந்தச் சுமை அனுபவங்களை எழுத்தாக்குவதும்தான் அறிவு ஜீவிகளின் அடையாளங்கள். இப்படிச் சுமைகளை ஏற்பதும், போராடுவதும், அந்தப் போராட்டங்களை எழுத்தாக்குவதுமான நிகழ்வுகள் மானுடர்களைப் புனிதப்படுத்துகின்றன; இதற்குப் பெயர்தான் "அமரத்துவம்" என்பது. இப்படித்தான் நமது மகாகவி பாரதி "அமரத்துவம்" பெற்றான். படிப்பு வழியேயும் படைப்பு வழியேயும்தான் மானுடன் "அமரத்துவம்? பெறமுடியும் என்று கருதித்தான், நமது சமுதாயத்தில், நமது முன்னோர்கள் "கலைமகள் வழிபாடு" என்று ஒரு வழிபாட்டை உருவாக்கினார்கள். ஆனால் காலத்தின் கோலம் கலைமகள் வழிபாடு பொருந்தாத வெற்றுச் சடங்காகப் போய்விட்டது. கலைமகள் வழிபாட்டு நாளன்று புத்தகங்களைக் கட்டிவைப்பது என்றும், கட்டி ஓடும் நீரில் போட்டுவிடுவது என்றும் பொருந்தாத பழக்கங்கள் எப்படியோ உருவாகிவிட்டன. ஆனாலும் இன்று நம்மிடையே நல்ல மாற்றங்கள் உருவாகி வருகின்றன. கலைமகள் வழிபாட்டு நாளன்று புதிய நூல்கள் ஒருவருக்கொருவர் பரிசளிக்கும் நல்ல மரபை மேற்கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறது.


அறிவு ஜீவிகளாய், எழுத்தைப் படைத்து அமரத்துவம் பெற்றவர்கள் தமது எழுத்துக்கள் மூலமாக இந்தச் சமுதாயத்தை, சமுதாயத்தின் போக்கை ஒரு தளத்திலிருந்து அடுத்த தளத்திற்கு, மிக உன்னதமான முறையில் நகர்த்திக்கொண்டு போயிருக்கிறார்கள். சமுதாயத்தை அசைத்து அடுத்தடுத்த தளத்திற்கு நகர்த்திப்போதல் என்பது மிக முக்கியமான ஆத்மார்த்தமான பணியாகும். இதைத்தான் நமது படைப்பாளர்கள் சங்க காலத்திலிருந்து இன்றுவரை செய்து வந்திருக்கிறார்கள். இது மிக முக்கியமான செய்தியாகும். நமது அறிவுஜீவிகள், எழுத்தாளர்கள் சமுதாயத்தை நகர்த்திச் சென்றுள்ள நேர்த்தியும் பாங்கும், அதில் செலுத்தியுள்ள கருத்தும் கவனமும் நன்கு ஆராயப்பட வேண்டும். சமுதாயத்தில் நிலவும் எத்தனையோ வகை வாழ்வியல் முரண்பாடுகளை அவர்கள் கணக்கில் எடுத்துக்கொண்டார்கள். சங்க இலக்கியப் புலவர் பக்குடுக்கை நன்கணியார் பாடிய புறநானூற்றுப்பாடல் அப்படித்தான் வாழ்வியல் முரண்பாட்டை மிக அழகாக, மிக உருக்கமாக நமக்கு எடுத்துரைக்கிறது. ஓர் இல்லத்தில் சாக்காட்டுப்பறை ஒலிக்கிறது; அதே நேரத்தில் வேறு ஓர் இல்லத்தில் திருமணத்திற்கு உரிய முழவு ஒலிக்கிறது. படைப்புக் கடவுளாகிய நான்முகன் இந்த ஒவ்வாமையை, இந்த முரண்பாட்டை ஏன் படைத்தான் என்று இந்தச் சங்கப்பாடல் சிந்திக்கிறது; எளிய் பாடல்தான்; சிறிய பாடல்தான்; ஆனால் மிகப்பெரிய உண்மையை உணர்த்தி விடுகிறது. இவ்வுலகம் இன்னாமையும் உடையது; இனிமையும் உடையது; இரண்டும் கலந்ததே இம்மண்ணியல் வாழ்க்கை என்ற பேருண்மையை உணர்த்துகிற பாட்டு; மண்ணகத்திலான நமது வாழ்வியல் இரண்டும் கலந்ததே என்பதை உள்ளடக்கிய எழுத்து. இதுதான் மானிடர்களை ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்திற்கு நகர்த்திச் செல்லுதல் ஆகும். இதை உணர்தலும், உணர்த்துதலுமே நமது பார்வையில் மிக உயர்ந்த ஆன்மிகம் ஆகும். நமது இலக்கியங்களும் இலக்கியப் பாத்திரங்களும் இந்தப் பேருண்மையைத்தான் பல்வேறு வடிவங்களில் உணர்த்துகின்றன. பூம்பாவை இறப்பும் சம்பந்தரால் உயிர் பெற்று எழுவதும் இந்த உண்மையைத்தான் நமக்குச் சொல்கின்றன; அப்பூதியடிகளின் மகன் அரவம் தீண்டி இறப்பதும், நாவுக்கரசரால் அவன் உயிர் பெற்று எழுதலும் ஆகிய நிகழ்வுகள் இந்த உண்மையைச் சொல்லவந்தவையே. மகாபாரதப் போர்க்களம் முடிந்தபிறகு, "ஏதேனும் வரம் கேட்டுப் பெற்றுக்கொள்" என்று கண்ணன் குந்திதேவியைப்

பார்த்துக் கேட்டபோது "எனக்குத் துன்பத்தையே வரமாகத் தா" என்று கேட்டுக்கொள்கிறாள்; பாஞ்சாலி உச்சநிலையில் அவமானப்படுத்தப்படுதலும், இறுதிக் கட்டமாகக் கண்ணனால் காப்பாற்றப்படுதலுமான முரண்காட்சிகள் மானுடத்தை ஒரு தளத்திலிருந்து இன்னொரு தளத்திற்கு நகர்த்திக்கொண்டுபோகும் அர்த்தமுள்ள நிகழ்வுகளேயாகும். நாயன்மார் வாழ்க்கை முழுவதிலும் இத்தகைய முரண்பாட்டுக் களங்கள்தான் நிரம்பிக் கிடக்கின்றன. அவர்கள் சந்தித்த சோதனைகளும் பட்ட வேதனைகளும் வெகு நுட்பமானவை; கேட்டது சரியா? தவறா? என்று அவர்கள் சிந்திக்கவில்லை; மாறாக, கேட்கப்பட்டது தங்களிடம் இருக்கிறதே என்றல்லவா மகிழ்ந்தார்கள், உவகை கொண்டார்கள். நாயன்மார்கள் சந்தித்தது எல்லாமே வாழ்வியல் முரண்பாடுகளே! அவர்கள் மகிழ்ந்தும் உவந்தும் எதிர்கொண்ட காரணத்தால் அவர்கள் "அமரத்துவம்" பெற்றார்கள்.

எது வாழ்வு? வாழ்வின் வயது என்ன? என்ற வினாக்களுக்கு கௌதமபுத்தர் மிகத் தெளிவாக விடை அளித்தார். "ஒவ்வொரு கணமும் வாழ்வதுதான் வாழ்வு; அதற்கு இதுதான் வரம்பு, இவ்வளவுதான்வயது என்றெல்லாம் வரையறை போட்டுவிட முடியாது; தினந்தோறும் வாழுங்கள், கணந்தோறும் வாழுங்கள் என்பதுதான் புத்தரின் செய்தியாக இருந்தது. வாழ்க்கைச் சக்கரம் சுற்றி சுற்றி வருகிறது; ஒரு கணம் மேலே, மறுகணம் கீழே என்று சுற்றிச் சுற்றித் தொழில்படுகிறது; இந்தச் சுழற்சியில் இதுதான் வாழ்வு, இதுதான் வாழ்க்கை அல்லாதது என்று பிரித்தறிய இயலாது; இன்ப - துன்ப முரண்பாடுகள் எல்லாமே வாழ்வியல்தான். சுருக்கமாகச் சொன்னால், இந்தச் சுழற்சியில் நாம் பிறருக்குப் பயன்படுமாறு வாழ்வதே அறிவுசார்ந்த வாழ்க்கை எனலாம்.

இத்தகைய மேலும் கீழுமான, இன்பமும் துன்பமுமான வாழ்க்கையில் இலக்கியமும் எழுத்துக்களும் நமக்கு மருந்தாகவும் விருந்தாகவும் இருக்கின்றன; இத்தகைய மருந்தும் விருந்துமான எழுத்துக்களைச் சமுதாயத்தில் வளர்த்தெடுக்கும் அரிய முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுப் பணியாற்றும் நமது உலக எழுத்தாளர் சங்கத்தையும், அதன் பொறுப்பாளர்களையும், இந்த ஆண்டு விருதுகள், பாராட்டுக்கள், பரிசுகள் பெறும் சான்றோர்களையும் இளம் சிறுகதைப் படைப்பாளர்களையும் வாழ்த்திப் பாராட்டுகிறோம்!

கட்டுரையாக்கம்: மு. பழனி இராகுலதாசன்



BOOK POST

Book pocket containing printed matter

MAKKAL CHINTHANAI-January 2015

Price Rs. 8-00

Date of Publication 20-1-2015



பெறுநர்

திரு

திருவருள்திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி-(அஞ்சல்)
காரைக்குடி-(வழி),

அவர்கள்

அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி. ✆ : 264166